# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14-ந் திகதி சனிக்கிழமை — பிரிதிசதம் 12 | 40-ம் இலக்கம்


# மீண்டுமோர் சமாதான வேண்டுகோள்



பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பர் உலக நாடுகளின் தலைவர்களுக்கு உலகசமாதானத்தைப் பேணும்படி வேண்டுகோள் விடுத்த மூன்று வாரங்களுக்குப் பின்னல் கடந்தமாதம் 29-ம்தேதி மீண்டுமோர் வேண்டுகோளை அவர்களுக்கு விடுத்துள்ளார். உலகநாடுகளிடையேசமாதானம் நிலவும்படி செபமாலையைச் செபியுங்கள் என்று வற்புறுத்துகிருர்.

உலகமுழுவதிலுமுள்ள கத்தோலிக்க மேற்றிராணிமாருக்கும், விசுவாசிகளுக்கும் எழுதிய பொதுநிருபத்தில், பாப்பரசர் செபப்படையொன்றை உலக முழுவதும் நடாத்தும்படி வற்புறுத்துகிருர். செபமாலை செபங்களிலே மிகவும் வல்லபம் பொருந்திய ஆயுதம், முழுஉலகத்தினதும், திருச்சபையினதும், சாதாரண தேவைகளிலும், அவசரங்களிலும் திருச்செபமாலைப்பக்தி கைகண்ட ஔஷதமாய் இருந்து வந்திருக்கிறது என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமது கடிதத்தின் ஆரம்பத்திலேயே பாப்பரசர் உலகசமாதானத்துக்காகத் தாம் வேண்டுகோள் விடுத்த தினத்தை ஞாபகப்படுத்துகிருர். கருதினல்மார்பலரும், இராஜதந்திர உறுப்பினரும், பெருந்தொகையான விசுவாசிகளும், வேதபோதக கல்லூரி மாணவர்களும் அங்கு குழுமி நின்று உலகநாடுகள் அனைத்துக்கும் பிரதிநிதித்துவம் வகித்தாற்போல் காட்சியளித்தனர். கிறிஸ்தவர் அல்லாதோரையும் அந்த ஜனத்திரள் ஒருமுகப்படுத்திக் காட்டி எல்லா மக்களும் உலக சமாதானம்என்ற உன்னத இலட்சியத்திலே ஏகோபித்து குரல் எழுப்புவது போன்ற மாபெரும் சந்தர்ப்பத்திலேதான் தாம் அவ் வேண்டுகோளை விடுத்தார் என்று குறிப்பிடுகின்ருர்.

தமது வேண்டுகோளுக்கு உணர்வும், ஊக்கமும் அளித்துப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த அப்போஸ்தொலிக்க கடிதத்தை வரைகிறேன் என்று கூறுகிருர் பாப்பரசர். செபமாலையோடும், செபமாலை மூலமாகவும் செபப்படையணி அமைத்து உலகசமாதானத்துக்காக வேண்டும்படி கேட்கிருர் பரிசுத்ததந்தை. காலஞ்சென்ற 13-ம்சிங்கராய பாப்பரசர் செபமாலையைப்பற்றிக் கூறியவைகளை ஞாபகப்படுத்தி, அதன் பின்னரும், பாப்புமார் திருச்சபையின் அவசரங்களிலும், ஆபத்துக்களிலும் திருச்செபமாலையின் இன்றியமையாமையைப்பற்றிக் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும், படிப்பினைகளையும் எடுத்துக்கூறி வற்புறுத்துகிருர்.

செபமாலையின் சுருக்கம் மூன்று அம்சங்களையே அடக்கியுள்ளது. ஒவ்வொரு காரணிக்கமும், பரமஇரகசியங்களின் தியானம்; அத்தியானத்தில் முழுமையும் இரண்டறக்கலந்த பிரதிபலிப்பு; நல்லசுத்தகருத்து ஆகிய இம்மூன்று அம்சங்களும் செபமாலைத்தியானத்துக்கு வேண்டுவனவாகும். இம்மூன்று அம்சங்களோடு திருச்செபமாலையின் அடையாளங்கள் சுற்றிவலம் வருகின்றன. இரட்சணியமடைந்து பரந்துவாழும் விசுவாசிகளின் கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஆன்மாவினதும் ஏக வேண்டுதலாகஅமைந்து உலகின் எத்திசைகளிலிருந்தும் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் தேவைகளுக்காக ஒருமித்து மன்ருடும் ஒரே செபத்தால் எல்லோரையும் இணைக்கின்றது. லத்தீன் திருச்சபையின் விசுவாசிகளுக்கு திவ்வியபூசைப்பலியின்பின் செபமாலை இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. சந்நியாசிகளுக்கும், குருமாருக்கும், திவ்விய பூசைக்குப்பின் அவர்களது கட்டளைச் செபமும், அடுத்தபடியாகச் செபமாலையும்தான் விசேஷ செபங்களாகும். இல்லறத்தோர் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொண்டபின் அடுத்தபடியில் கைக்கொள்ள வேண்டிய பக்திமுயற்சி செபமாலையே. செபமாலை, தேவனிடம் எங்களை நெருக்கமாகப்பிணைக்கும் செபமாகவும், உயர்த்தப்பட்ட காணிக்கையாகவும் இருக்கின்றது என்று கூறுகிருர் பாப்பரசர். செபமாலைப்படைக்கு உதவியாக முன் சுட்டிக்காட்டப்பட்ட மூன்று அம்சங்களுடன் தியானிக்கவேண்டிய சிலதியானங்களையும் குறிப்பிட்டிருக்கிருர்.

முடிவில் பாப்பரசர், திருச்சபையின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரிடமும் உலகசமாதானத்துக்காக மன்ருடி உருக்கமாகவும், பணிவாகவும் எமது செபங்களைத் தேவதாயாருடைய செபங்களோடு ஒன்றுசேர்த்து வேண்டுவோமானல், நிச்சயமாய் உலகம் சமாதானமடையும் என்று கூறுகின்ருர் நம்பரிசுத்த தந்தை. ஆகவே, ஐப்பசிமாதத்தில் பாப்பரசரது கருத்துக் கிணங்கச் செபமாலையைப் பத்தியுடன் சொல்லிவருவோமாக.

---

## தந்தையின் உதவி

"அனைத்துலக அகதிகள் ஆண்டு" என்ற ஏழைமக்களின் உதவிக்காக நிறுவப்பட்டுள்ள நிலையங்களுக்கு, வியற்னும் மக்களுக்காகப் பரிசுத்ததந்தை ரூபா 2, 20,000 அளித்துள்ளார். வியற்னமில் இருக்கும் பாப்புவின் பிரதிநிதி அருட்பெருந்தகை மாரியோ பிரினி இத்தொகையை 24 நிலையங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். தொகையைப் பெற்ற நிலையங்களுள் புத்தமத நிலையங்களும் உள்ளன.

---

## புதுக் குழந்தைளுக்காகப் பாப்பு செபிக்கிருர்

செபமாலை செபிக்கையில் சந்தோஷ காரணிக்கங்களில் பாலன்பிறப்பைத் தியானிக்கும்போது புதுக்குழந்தைகளுக்காகத் தாம் செபித்து வருவதாகப் பாப்பரசரின் பலஸ்தீனசங்க, ஐ. நா. அகதிகள் ஸ்தாபன அங்கத்தினருக்குப் பரிசுத்தபிதா பேட்டிஅளித்தபோது கூறினர்.

அவ்வேளை ஒரு லட்சத்துக்கு அதிகமான அரபு அகதிகள்பற்றி விபரிக்கப்பட்டது. அவர்களுக்காகவும், அவர்களின் புதியகுழந்தைகளுக்காகவும் தாம் செபிப்பதாகவும் பாப்பரசர் உறுதி கூறினர்.

---

## சீனவில் 'தேசீய திருச்சபை' படுதோல்வி

சீனப் பொதுவுடைமை அரசாங்கம் ஏற்படுத்திய "தேசாபிமானத் திருச்சபை 4 வருடங்களாகியும் செல்வாக்குப் பெறவில்லை என வேதபோதக சபைத் தகவலகம் அறிவித்திருக்கின்றது. இச்சபை அரசாங்க நியமனம் பெற்ற 35 மேற்றிராணிமாரைக் கொண்டுள்ளது. இவர்கள் பல மாதங்களாக மாத்திரமல்ல, பல்லாண்டுகளாகவும் மன நிம்மதியற்றுத் துன்பப்பட்டவர்கள். பொதுவுடைமைக் கருத்துத் திணிக்கப்பெற்றவர்களும் மனச் சுயாதீனத்தை இழந்தவர்களுமாவர்.

ஒரு சொற்பதொகையான குருமார் இப்பிரிவினை மேற்றிராணிமாருடன் ஒத்துழைக்கின்றனர். இவர்களில் சிலர் கிறிஸ்துவ நோக்கை முற்ருக இழந்து போலித் தேசாபிமானத்தால் ஏவப்படுகின்றனர்; பலர் துன்பப்படுகின்றனர். மனத்தைரியம் கிடைத்தால் திருச்சபையில் வந்து சேர்ந்து விடுவார்கள்.

---

## தந்தையின் இரக்க உள்ளம்

புரட்டாசித்திங்கள் 10ஆம் நாள் இத்தாலியில் மோன்சா என்ற இடத்தில் கார் பந்தையத்தில் விபத்து ஒன்று நடந்தது. பந்தையக்கார் ஒன்று வழியை விட்டகன்று, வேடிக்கை பார்த்திருந்தவர்களின்மேல் மோத, 14 பேர் இறந்தனர், 10 பேர் காயமுற்றனர். பரிசுத்த தந்தையின் அன்புள்ளம் மே. த. மொன்தீனி ஆண்டகை அவர்களை அனுப்பி விபத்தில் மாண்டவர்களையும், காயமுற்றவர்களையும் பார்த்து, தமது அநுதாபத்தை அளித்துவரச் செய்தது.

---

## தந்தையின் வருத்தம்

"கியூபா செய்திகள் நம் உள்ளத்தை உடைக்கின்றன. துன்புறும் கியூபா மக்களின் நலனையும், சமூக முன்னேற்றத்தையும், நாட்டின் சமாதானத்தையும், மத உரிமையையும் பெரிதும் விழைகின்ருேம். நன் மனமும், பொறுமையில் உருவான தீர்மானமும், கிறிஸ்துவப் பண்பைக் காப்பாற்ற உண்மை ஆர்வமும் அவசரக் கோலங்களை அகற்றஉதவும் என நம்புகின்ருேம். கிறிஸ்துவப் பண்புதான் மனிதனின் பலதரப்பட்ட வாழ்விலும் நலனை அளிக்க வல்லது" என்கிருர் நம்பாப்பரசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்க்குப் பிரியாவிடை

கடந்த இருவருடங்களாகச் சிலாபம் சென்மேரிஸ் தமிழ் ஆண்பாடசாலையில் கனிஷ்ட உதவி ஆசிரியராயிருந்து, 1-10-61 முதல் குருனாகலைச் சேர்ந்த கலுகாமம் றே. க. தமிழ்க் கலவன் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக மாறிச்சென்ற ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளையவர்கட்குக் கடந்த 29-9-61 வெள்ளிக்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் பரிமளிப்பான பிரியாவிடையொன்று அளிக்கப்பட்டது. வைபவத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய பாடசாலை அதிபர் சங். சகோதரர் டப்ளியு. எஸ். பீரிஸ் அவர்கள், திரு. பிள்ளையவர்களை "இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கும், மாணவரின் கல்வி அபிவிருத்திக்கும், தமிழ்க் கலை, கலாசார வளர்ச்சிக்கும், ஆசிரிய சமுதாயத்தின் நலனுக்கும் அல்லும்பகலும் அயராதுழைத்த அருமையான ஆசிரியர்" என்று தமது தலைமையுரையில பாராட்டிப்பேசினார்.

தொடர்ந்து பேசிய ஆசிரியர் திரு. எம். சிறில் பெரேரு அவர்கள், "வடமேல் மாகாணத்திலே கல்வித்தொண்டும், தமிழ்ப்பணியும், சமூகசேவையும் புரிந்த இவ்வாசிரியர் சிறந்த பண்பாடுகளும், சுகுணங்களும் நிறையப்பெற்று அனைவருக்கும் நன்முன்மாதிரியாய் விளங்கிய உத்தமர்" எனக் குறிப்பிட்டார். மாணவன் எம். சுப்பிரமணியமும், மற்றும் பலரும் பேசியபின் ஆசிரியர் திரு. பிள்ளையவர்கள் அனைவருக்கும் நன்றிகூறினார்.

சிற்றுண்டியுபசாரணைகளுடன் வைபவம் முடிவுற்றது. — நிருபர்

* * *

### வெளிநாட்டுக் கத்தோலிக்ககுருமாருக்கு விதிக்கப்பட்டுள்ள வாசகாலவரிக்குப் பலத்த கண்டனம்

## நீர்கொழும்பு மாநகரசபை பிரதமருக்கு மகஜர்

"வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்து சமயப்பணியாற்றும் மதகுருமாருக்கும், மிஷனரிமாருக்கும் விதிக்கப்படும்வரி நீதியற்றதுமல்லாமல் கத்தோலிக்கருக்கு மாத்திரமன்றி, பௌத்தர் உட்பட ஏனையசமய போதகர்களுக்கும் எதிரானஓர் நடவடிக்கையாகும்." இவ்வாறு நீர்கொழும்பு மாநகரசபையின் பதில்மேயர், அதன் அங்கத்தவருள் ஒருவரான திரு. வின்சென்ற் காரியகாரவான என்பவரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்றின்மேல் பேசியபோது குறிப்பிட்டார். அப்பிரேரணையாவது "சமயபோதகத்துக்கென இலங்கைவரும் பிறதேசத்தவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விசாவரியை நீக்கிவிடும்படி இச்சபை பிரதம மந்திரியவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

அரசாங்கம் பிறநாட்டுச் சமயகுருமாருக்கு விதித்தவரியை அநீதியான, கொடுமையான ஒருவரியென்று பல அங்கத்தினர் கண்டித்தனர். மேலும் இவ்வரி உலகநாடுகளின் கண்டனத்தைத் தூண்டிவிடும் என்றும் எடுத்துக்கூறப்பட்டது.

இச்சபையின் உறுப்பினரான திரு. ஷாகிட் மரைக்கார் பேசியபொழுது, இவ்வரி இலங்கையின் சமயசுதந்திரத்துக்குப் பலத்த அடியாகும் என்றார்.

இப்பிரேரணையைப் பிரேரித்துப் பேசியவர் பண்டையசிங்கள அரசரைப் போன்று இன்றைய அரசாங்கமும் சகலசமய போதகர்களையும் ஆதரிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்.

இப்பிரேரணையை ஆதரித்துப்பேசிய திரு. ஹேர்பட் பெர்னண்டோ அவர்கள் "இவ்வரிவிதிப்பு சமயசுதந்திரத்தை மீறும்செயலாகும் வழிபாட்டுச் சுதந்திரம் பாதுகாக்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்ட எந்தநாட்டு அரசாங்கமும் இப்படியான கட்டுப்பாட்டை விதிக்க முன்வராது என்றார்.

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

### புதிய ஆலய அபிஷேகம்

இம்மாதம் 22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிபோல் திரிகோணமலை மேற்றிராணியாரான மேன்மை தங்கிய இக்னேஷஸ் கிளெனி ஆண்டகைகள் கட்டுக்குளப் பகுதியிலுள்ள குச்சவெளியில் வெகுநேர்த்தியாய்க் கட்டப்பட்டிருக்கும் செபமாலைமாமரி அன்னையின் ஆலயத்தை அபிஷேகித்துத் திவ்வியபூசை ஒப்புக்கொடுப்பார்.

* * *

### போளவலானையில் 400-வது நவநாள்

போளவளானையில் சதாசகாயமாதாவின் 400-வது நவநாள்தினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலநிலை மிகவும்மோசமானதாயிருந்த போதும், பெருந்தொகையான பக்தர்கள் சமுகமளித்தனர். அன்றுகாலை பெரியபாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலையில் வழமையான நவநாள் நடைபெற்றது.

* * *

### பிரிவுபசாரம்

தோப்பு ஊரைச் சேர்ந்தவரும், தலைமை ஆசிரியர் பதவி ஏற்றுக் கடந்த நாற்பது வருடங்களாகக் கற்பிட்டி, முந்தல், ஏத்தாலை, வெள்ளைக்காரன்குடா ஆகிய இடங்களில் தலைமை ஆசிரியர் சேவை செய்தவருமாகிய திரு. ம. பிரான்சீஸ் பர்னாந்து புள்ளே ஆசிரியர் அவர்கள் தமது அறுபதாவது வயது பூர்த்தியடைந்து சென்ற 17-9-61இல் தமது ஆசிரிய பதவியில் இருந்து இளைப்பாறலாயினர். இவர் கடைசி ஆறுவருடங்கள் சேவை செய்த இடமாகிய தலைவில் அர்ச். அன்னம்மாள் மீசாமைச் சேர்ந்ததும், கற்பிட்டிக்கு வடக்கே 6 மைல் தூரம் கடற்பிரயாணம்பண்ணி அடைய வேண்டிய இடமுமாகிய வெள்ளைகாரன்குடா என்னும் கிராமத்தில் இவரின் பிரிவுபசார வைபவம் தலைவில் மீசாம் பரிபாலகர் வண. பீற்றர் றொட்ரிகோ சுவாமியார் தலைமையில் 30-9-61இல் அக்கிராமவாசிகளால் வெகு சிறப்பாக நடைபெறலாயிற்று.

அன்றுதினம், வெள்ளைக்காரன்குடா பரிசுத்த சிலுவையார் கோவிலில் பாடசாலைப்பிள்ளைகள், பெற்றோர், பந்துக்கள், சிநேகிதர் பெருந்திரளானோர் கூடியிருக்க வண. பிதா பீற்றர் றொட்ரிகோ அவர்களால் திவ்விய பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. பூசை முடிவில் பட்டாசுகள் வெடிக்கப் பாலர் ஆரவாரஞ்செய்யப் பிரியாவிடை நாயகருக்கு மாலையிடப்பட்டது. பின்பு, புகைப்படமெடுக்கப்பட்டதும் அலங்கரிக்கப்பட்டிருந்த பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பாடசாலைப் பிள்ளைகளால் வாசித்தளிக்கப்பட்ட வாழ்த்துப்பத்திரத்தில் "இவர் இவ்ஆறு வருடகாலமும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மாத்திரமல்லாது, கிராமத்திலுள்ள மற்றவர்களுக்கும் நன்முன்மாதிரிகையாயும், நல்வழிகாட்டியாயும் இருந்து, பிரிந்து செல்கிறார்" என்று வாசிக்கும்போது அங்கு குழுமியிருந்தவர்களில் கண்ணீர் சிந்தாதார் ஒருவருமில்லை.

வண. பிதா பீற்றர் றொட்ரிகோ ஆசிரியரின் நேர்மை, கீழ்ப்படிதல், நன்முன்மாதிரி, உத்தம கத்தோலிக்கதனம், கடமையின் மட்டில் கொண்டுள்ள கரிசனை முதலியவைபற்றிப் பாராட்டிப் பேசினார்.

அத்துடன் ஆசிரியருக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டுச் சிற்றுண்டி உபசாரணை நடைபெற்றதோடு, பிரியாவிடை நாயகர் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### நல்லாயன் கன்னியரின் பொன்விழா

கண்டியில் நல்லாயன் கன்னியர் மூவர் பொன்விழாக் கொண்டாடினர். சென்றமாதம் 30-ந்திகதி நல்லாயன் கன்னியர்சபையைச்சேர்ந்த மூன்று கன்னியர் தமது துறவறவாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடும் பாக்கியம் பெற்றனர். மேற்படி சபையைச் சேர்ந்த பெருந்தொகையான கன்னியர்கள் யூபிலிவிழாவைக் கண்டுகளிக்கும் இம்மூவரையும் வாழ்த்தினின்றனர். இந்த மூன்றுகன்னியர்களையும் இலங்கையில் பலரும்அறிவர்.

சங். ஜோண பப்ரிஸ்ற் தாயாரும், சங். மார்க்தாயாரும், சங். பிறெண்டன் தாயாருமே பொன்விழாகண்ட கன்னியராவர்.

* * *

### இளங் கிறிஸ்தவ மாணவர் மன்றத்தின் வருடாந்த மாநாடு

அர்ச். இராயப்பர்கல்லூரி, அர்ச். ஆசீர்வாதப்பர்கல்லூரி, டெகிவலை கன்னியர்மடம், அர்ச். செபஸ்தியார் கல்லூரி என்பனவற்றைச்சேர்ந்த இளம் கிறிஸ்தவமாணவர் டெகிவலை, அர்ச். மரியநாயகி கல்லூரியில்கூடித் தங்கள் வருடாந்த அறிமுகம்செய்யும் தினத்தைக் கொண்டாடினர். அர்ச். மரியநாயகி இளங்கிறிஸ்தவ மாணவர் தலைவர் திரு. டக்ளஸ்பெரேரா மாநாட்டிற்குத் தலைமைவகித்தார். 4குருமார் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

தலைமையுரை முடிந்ததும், இளம் கிறிஸ்தவமாணவரின் ஞானத்தலைவர் வண. ஏனஸ்ட் பெறுதோட்ட சுவாமியார் உரைநிகழ்த்தினார். கிளைச்சங்கங்களின் அறிக்கைகள் விவாதிக்கப்பட்டன. அன்றுகாலை 11-30மணிக்குத் திவ்விய பூசை. அதன்பின் தேசியதலைவரான வண. அன்செலம் சுவாமியவர்களால் உரைநிகழ்த்தப்பட்டது. கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதும், சேவையாளர் கீதம்பாடி நிகழ்ச்சிகள் முடிவெய்தின.

* * *

### தேவத்தையில் குடும்பதினம்

இவ்வாரஇறுதியில் கத்தோலிக்க குடும்பங்கள் தேவத்தைத் திருப்பதியில் கூடி வருடாந்த குடும்பதினத்தைக் கொண்டாடுவார்கள். அன்றுதினம் பிரமாண்டமான சனத்திரள் மாதாவின் திருசேத்திரத்தை முற்றுகையிடும். அண்மையிலே நோயாளர்தினம் கொண்டாடியபோது தேவத்தையில் பிரமாண்டமான பக்தர்கூட்டம் திரண்டிருந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டு குடும்ப தினத்துக்குப் பெருமளவுமக்கள் கூடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலியாண வாக்குத்தத்தங்கள் முன்னர் பொதுவாகவே புதுப்பிக்கப்பட்டன. ஆனால், இம்முறை ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியே தம்பிள்ளைகளுடன் பீடத்தண்டைவந்து தேவதாயின் திருப்பாதநிழலிலே, அதிமேற்றிராணியாரின் சமுகத்திலே, தேவாதிதேவனை யேசுக்கிறிஸ்துஅரசரின் பிரசன்னத்திலே தங்கள் இல்லறவார்த்தைப் பாடுகளைப் புதுப்பிப்பார்கள்

கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர் அவர்கள் தமது மேற்றிராசனத்திலுள்ள சகலவிசாரணைப் பங்குகளினதும் கட்டளைக்குருமாருக்கு அனுப்பிய சுற்றுநிருபத்தில், "மேற்றிராசன [illegible]பாடுகளில் ஓர் அங்கமாக 8-ந்திகதி ஞாயிறுவாரம் அல்லது தேவமாதாவின் தேவதாய்மைத் திருநாளன்று 11-10-61-இல் ஒவ்வோர் விசாரணைப்பங்கிலும் இத்தினம்கொண்டாடப்பட வேண்டுமென்று கேட்டுள்ளார்.

* * *

### முருங்கனில் நாடக விழா

'எங்கள் குழந்தைகள்' என்னும் ஆங்கில நாடகமும், 'இரத்தத் துளி' என்னும் தமிழ் நாடகமும், அவற்றிற்கு உதவியான நர்த்தனங்களும் பார்ப்போர் மனங்களிப்ப, விழி களிப்ப வெகு விமரிசையாகச் சென்ற மாதம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை முருங்கன் கிறிஸ்துஇராசா பாடசாலையில் நடந்தேறியது. இந்நாடக விழாவிற்கு வட்டார வித்தியாதரிசி திரு. ச. நவரத்தினம், பி. ஏ. அவர்கள் தலைமை வகித்தார்.

தலைவர் தமது இன்னுரையின் போழ்து பின்வருமாறு கூறினார்: "நான யாழ்நகரிலிருந்து இரண்டுஇலட்சியங்களுடனே முருங்கன் வட்டாரத்திற்கு வித்தியாதரிசகராகக் கடமைபுரிய வந்திருக்கிறேன். அவற்றுள் ஒன்று விஞ்ஞானம்; ஆங்கிலம் மற்றொன்று. இவைகள் இரண்டும் எங்கள் வாழ்க்கை விமோசனத்துக்கு இன்றியமையாதன. இன்று நாம் எங்கே பார்த்தாலும் இவைகளின் பிரயோசனங்களைக் காணமுடியும். முருங்கன் வட்டாரத்திற்கோ இவை மிகமிக அவசியமானவை. நீங்கள் என்றும் விவசாயிகளாகவே இருக்கிறீர்கள். இக்கல்விகளுக்கு என்னால் இயன்றளவில் முயற்சி எடுத்தே தீருவேன். பெற்றோர்களாகிய நீங்களும் சங்கஞ் சாவடி வாயிலாகப் பூரண ஒத்துழைப்பு அளிப்பீர்கள் என்பதும் எனது திடமான நம்பிக்கை.

"ஆனால், என்னுடைய நோக்கங்களில் ஒன்றினை, இந்தச் சின்னஞ்சிறிய — பட்டதாரிகள் இல்லாத — பாரிய கட்டடமற்ற — சூழல் உதவியற்ற இக்கிராமப்பாடசாலை நிறைவேற்றி, என்மனதிலே பெரிய நாணத்தையும், அதிக மகிழ்வையும் ஊட்டியது; அது ஆங்கில நாடகமே. பெரிய கல்லூரிகளில்கூட இவ்வித உண்மையான ஆங்கில உச்சரிப்பையோ, மனனத்தையோ, இயற்கையான முகபாவத்துடனும், தருணத்திற்கேற்ற அபிநயத்தோடும் பேசுந்திறனையோ நான் காணவே இல்லை. இது எனது புகழ்மொழிகள் அல்ல; உண்மை உரைகள்.

"அடுத்தபடியாக நடந்த 'இரத்தத் துளி' என்னும் நாடகம், பெரியார் சேக்ஸ்பியர் எழுதிய வெனிஸ் வர்த்தகன் என்னும் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு. இப்படியான மொழிவளத்திலே — உயிர்த்துடிப்போடு தமிழில் நடித்ததை இன்றுபோல் என்றுமே யான் கண்டதில்லை. நடிகர்களின் இயற்கையான — இடத்துக்கு ஏற்றதான அபிநயப்பிடிப்பும், அதற்கான பேச்சும், முகவசீகரமும் என் உள்ளங்களையல்ல, எல்லோரது உள்ளங்களையுமே கொள்ளை கொண்டுவிட்டன. அதற்குச் சபையின் அமைதியும், முகங்களும் சான்றுபகரும். நடிகர்களின் உடுப்புகள், உடுப்புமுறைகள் பண்டைக்கால வெனிஸ் நகரைக் கண்டு எங்கள் கண்முன்னரே பிரதிபலித்துக் காட்டின.

"ஆதலின் இவர்கள் பிள்ளைகள் அல்ல; மாணிக்கமணிகள். இவர்களை யாவீணே மண்ணில் மறையவிட வேண்டும். பெற்றோர்களே! பாவம் இழைக்காதீர்கள். சாவனை செய்யாதீர்கள். ஆவன புரிய வாருங்கள்" எனக் கூறித் தாம் அணிந்திருந்த மாலையை சைலொக் நடிகருக்குச் சூட்டி, வணக்கத்தோடு தம்முரையை முடித்துக் கொண்டார்.

— நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

### தமிழ்மொழிபெயர்ப்பு

தமிழ்ப்பாடசாலைகளுக்கும், முஸ்லீம் தமிழ்ப்பாடசாலைகளுக்கும் அனுப்பப்படும்கடிதங்கள் எல்லாவற்றிலும் தமிழ் மொழிபெயர்ப்பும் இருக்கவேண்டுமென்று கல்விப்பகுதிக்குக் கல்வி மந்திரி உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்.

### சயரோகிகளும் சிகிச்சையும்

இலங்கையில் சயரோகத்தால் பீடிக்கப்பட்டவர்களாய் எண்பதினாயிரம்பேர் இருந்துவருகிறபோதிலும் நாற்பதினாயிரம்பேர்தான் சுகாதாரப்பகுதி அளிக்கும் சிகிச்சைவசதிகளைப் பயன்படுத்துகிறார்களென அறிவிக்கப்படுகிறது. சயரோகிகளைக் கண்டுபிடிப்பதிலுள்ள கஷ்டந்தான் இதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

### புளியின்விலைக்கட்டுப்பாடு

புளியின்விலை கட்டுக்குள் அடங்காது அதிகம் உயர்ந்து இறாத்தல் மூன்று ரூபா, மூன்றேகால் ரூபாவாகி விட்டமையாலே அதன் கட்டுப்பாட்டு விலை இறாத்தல் 50சதமாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகக் "கெசற்" அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. தற்போது புளிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் அதற்குப்பதிலாக வேறு பொருட்களை உபயோகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 50 சதமாக விற்கப் புளியிருந்தால்தானே.

### வெலிமடை உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள் சபையில் காலியாயிருக்கும் வெலிமடைத்தொகுதிஸ்தான உபதேர்தலில் இலங்கைச் சுதந்திரகாங்கிரஸ், ஜாதிகவிமுக்தி பெரமுனை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய இலங்கையர்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சியாகிய ஐந்துகட்சிகள் போட்டியிடவிருக்கின்றன. அரைவாசிக் கட்டுப்பணமான 500ரூபா மாத்திரம்கட்டித் தேர்தலில்போட்டியிடத் தங்களை அங்கீகரிக்குமாறு தேர்தல்கமிஷனரிடம் இவைகள்விண்ணப்பம் செய்துள்ளன. அபேட்சகர்களின் நியமனப்பத்திரங்கள் இம்மாதம்18-ந்திகதியன்று பதுளைக் கச்சேரியிலே சமர்ப்பிக்கப் படவேண்டியன.

### பண்டகசாலைக் களவுகள்

இலங்கைப் போக்குவரத்துச்சபை டிப்போக்களாகும் பண்டகசாலைகளில் 1958-ம்ஆண்டுமுதல் 1960-ம்ஆண்டு ஈறாகவுள்ள மூன்றுவருடங்களிலும் 63,327ரூபா 51சதம் பெறுமதியான டயர்கள், சில்லுகள் ஆதியன களவு போயிருப்பதாகச் சனப்பிரதிநிதிகள் சபையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சென்றவருடத்தில் அதிகம்கூடிய தொகையாக 54,198ரூபா 1சதம்பெறுமதியான சாமான்கள் களவுபோயின.

### பரீட்சகர்களும் பரீட்சைத்தாளும்

மாணவர்களின் பரீட்சைத்தாள்களைத் திருத்துவதிலும், அவைகளைத் தபாலிலே அனுப்புவதிலும் கூடிய கவனம் செலுத்தவேண்டுமென்று அரசாங்க பரீட்சைப்பகுதி பரீட்சகர்களையெல்லாம் கேட்டுள்ளது. பொதுத் தராதரபத்திர பரீட்சைத்தாள்களைத் திருத்தத் தனிப்பட்டபாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை அனுமதிக்கலாகாதென்று பரீட்சைக் கமிஷனர் தடைவிதித்திருப்பதையிட்டு அகில இலங்கை ஆசிரியர்சங்கம் கல்விமந்திரியிடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

### பாஷையும் பெட்டிசவிசாரணையும்

தமிழ்மக்கள்வாழும் பகுதிகளிலே தமிழிலும், சிங்களமக்கள்வாழும் பகுதிகளிலே சிங்களத்திலும் பெட்டிச விசாரணைகள் நடத்தவேண்டுமென்று சுகாதாரமந்திரி ஓர்அறிவித்தல் விடுத்திருக்கின்றார். கையாளக்கூடிய இடங்களிலெல்லாம் இம்முறையைக் கூடியவரை கையாளும்படியாக அவர்கேட்டிருக்கின்றார். தமிழிலே பெட்டிச விசாரணைநடக்கும்போது அது சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்திருக்கின்றார்.

### ஒருஎலுமிச்சம்பழத்தால்

பெந்தோட்டையிலே ஒருவர் தனது அயலவரின் தோட்டத்தில் எலுமிச்சம்பழம்ஒன்றைப் பறிக்கமுயற்சித்தபோது இருகுடும்பங்களுக்கிடையே தகராறுஉண்டாய் அதன்விளைவாக ஏற்பட்ட கைகலப்பினால் ஏழுபேர் காயமடைந்து பலப்பிட்டிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### பிரச்சினைகளைத் தீர்க்கும்வழி

சனப்பிரதிநிதிகள்சபையிலே அவசரகாலச்சட்டவிஷயமாய் அரசாங்கக்கட்சியைச்சேர்ந்த குருநாகல்பிரதிநிதி தயா பத்திரான அன்று பேசிய பொழுது; நாட்டில் சமாதானமும் அமைதியும் இருந்தால்தான் சோஷலிச சமுதாயத்தை உருவாக்கலாம்; இன்றைய நிலைமையிலே மொழிப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் நிலைமை சீர்ப்படாது; அவசரகாலசட்டத்தை வைத்துக்கொண்டே எல்லாப்பிரச்சினைகளையும் தீர்ப்போமெனக் கூறலாயினர்.

### பர்மா அரிசிக்கப்பல்

அடல்போட்ரீஸ் எனும்கப்பல் 5.800 தொன் பர்மா அரிசியை ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைவந்து சேர்ந்திருக்கிறது. அதனால் கடந்த இருவருடங்களாகப் பிழைப்பற்றிருந்த 500பேருக்குமேற்பட்ட துறைமுகத் தொழிலாளர் கப்பலிலிருந்து அரிசியை இறக்கிக் கரைசேர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

### பண்ணைவான்விபத்து

சென்றஞாயிற்றுக்கிழமைகாலை மூன்று பெண்கள்உட்படப் பதினெட்டுப்பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ஊர்காவற்றுறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான்ஒன்று பண்ணைத் தாம்போதியின் அக்கரை வாயிலுக்குச் சமீபமாய் ஓர்மதிலில் மோதியதால் குடைசாய்ந்து தீப்பற்றிக் கடலில்வீழ்ந்தது. அதன்சாரதியான 26வயதுடைய இராசநாயகம் விபத்துநிகழ்ந்த இடத்திலேயே இறந்துபோயினர். பிரயாணிகளில் நால்வர் பலத்தகாயமடைந்தனர். ஏனையோர் சிறுகாயங்களுடன் தப்பிக்கொண்டனர்.

### பிரதமர்விடுத்த அறிக்கை

செனற்சபையில் காலியாகப்போகும் ஸ்தானங்களுக்குப் பத்துச்செனற்றர்களின் ஸ்தானங்களிலே ஐந்துக்குச் சனப்பிரதிநிதிகள் சபையிலிருந்து தெரிவு நடைபெறவிருப்பதால்அத்தெரிவில் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் கலந்துகொள்ள வகைசெய்யப்படுமென்று பிரதமர்சிறிமா சென்ற4-ந்திகதிபுதன்கிழமை செனற்சபையில் தெரிவித்தார். செனற்றர் ஜி. நல்லையாஅவர்கள் அச்சபைக்கூட்டம் கலையும்வேளை கேட்டகேள்விக்குப் பதிலிறுக்குமுகமாகவே பிரதமர் இவ்வாறுதெரிவித்தார்.

### திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

சத்திரவைத்தியசிகிச்சை செய்விக்குமாறு சென்றஆடிமாதம் 15-ந்திகதியன்று விமானமார்க்கமாகப் பிரித்தானியதேசம் சென்றிருந்தவரான காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்அவர்கள் அங்கே எடின்பேக் மேற்குப் பெரிய ஆஸ்பத்திரியிலே சித்திகரமாகச் சத்திரவைத்தியசிகிச்சைபெற்றுத் தமது நோய்கள்நீங்கிக் குணமடைந்திருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. அவர்ஏற்கனவே ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறித் தற்போது லண்டன் நகரிலே சுகவிருத்தியடைந்து வருகிறாரெனத் தெரியவருகிறது. அவர் தமது பாரியார் சமேதராய் இம்மாதம் 20-ந்திகதியன்று கப்பல்மார்க்கமாகப் பிரயாணமாகி அடுத்தகார்த்திகை மாதம்4-ந்திகதி இலங்கைவந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் இம்மாதம் 19-ந்திகதி நடைபெறவிருக்கும் செனற்றர் தெரிவின்போது சனப்பிரதிநிதிகள் சபையில் அவர் சமுகமாயிருக்கமாட்டார்.

### தமிழ் எம். பி கள் விடுதலை

தடுப்புக்காவலிலே இருந்துவந்த தடைசெய்த தமிழரசுக்கட்சி எம். பி. கள் அனைவரும் சென்ற 4-ந்திகதி புதன்கிழமை விடுதலைசெய்யப்பெற்றார்கள். அவர்களுடன் வட்டுக்கோட்டை எம். பி. அவர்களின் பாரியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மன்னாரைச்சேர்ந்த ஜனாப் அப்துல் கபூர்ஆதியோரும் விடுதலைசெய்யப் பெற்றிருக்கின்றனர். சென்றசித்திரைமாதம் 17-ந்திகதி அவசரகால நிலைமை பிரகடனஞ்செய்யப் பட்டதைத்தொடர்ந்து தமிழரசுக்கட்சி தடைசெய்யப்பட்டது. அதனைச் சேர்ந்த எம். பி. களும், அதன் ஆதரவாளர்கள்பலரும் தடுப்புக்காவலில் வைக்கப்பெற்றார்கள்.

### மூளாய்க் கூட்டுறவு ஆஸ்பத்திரி

மூளாய்க் கூட்டுறவுஆஸ்பத்திரிச் சபையின் 25-வதுவருடாந்தகூட்டம் இம்மாதம்1-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முதலியார் பி. எம். சங்கரப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் எட்டாவதுமுறையாகவும் அவரே சபையின்தலைவராகத் தெரிவு செய்யப் பெற்றிருக்கின்றார்.

### அவசரகாலநிலை

தமிழரசுக்கட்சி எம். பி. கள் தடுப்புக்காவலிலிருந்து விடுதலைசெய்யப் பெற்றிருப்பினும் தமிழரசுக்கட்சிக்கு விதிக்கப்பட்டுள்ளதடை தொடர்ந்து நீடித்திருக்கும். அரசியல்பிரச்சினைகளைத் தீர்த்து, உடன்படிக்கை காணும்வரை அவசரகாலநிலை நீக்கப்படமாட்டாதென்று சபைமுதல்வர் சி. பி. டிசில்வா தெரிவித்திருக்கின்றார். சட்டமறுப்புஇயக்கத்திலே தமிழ்ப் பேசும்மக்கள்இறங்க வழிகோலிய மொழிப்பிரச்சினைபற்றியோ, அன்றேல் அதனோடுசம்பந்தப்பட்ட பிறபிரச்சினைகள்பற்றியோ விடுதலை செய்யப்பெற்ற தமிழரசுத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் கருத்து அரசாங்கத்துக்கு இல்லையென்றும், தடைசெய்யப்பட்ட தமிழரசுக்கட்சித் தலைவர்கள் அரசியல் கூட்டங்கள்நடத்த அனுமதிக்கப்படமாட்டார்களென்றும் அரசாங்கவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. யாழ்ப்பாணப் பகுதியிலே பொதுக்கூட்டங்கள் நடத்தவோ அல்லது ஒலிபெருக்கிகளை உபயோகிக்கவோ அனுமதிச்சீட்டு வழங்கப்படமாட்டாதென்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

## வெளிநாட்டுச் செய்திகள்

### தஞ்சம்புகுந்த தத்துவஞானி

லீப்சிக்சர்வகலாசாலையைச் சேர்ந்தவரும், பிரபல தத்துவசாஸ்திரியுமான பேராசிரியர் எண்ஸ்ற் புளோச் இம்மாதம் 1-ந்திகதியன்று கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியிலிருந்து தப்பியோடிச் சுதந்திர மேற்குஜேர்மனியிலே தஞ்சம்புகுந்திருக்கின்றார். மாக்ஸீய தத்துவசாஸ்திரத்தில் ஒரு மேதையான இவர் கிழக்குஜேர்மனியில் இனிமேல் சுதந்திரமாகச் சிந்திப்பவர்களுக்கும், வேலைசெய்கிறவர்களுக்கும் வாழ்வதற்கிடமில்லையெனக் கூறுகின்றார். கிழக்குஜேர்மன் கம்யூனிஸ்த அரசாங்கத்தின் பலாத்காரநிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும் காரணமாகவே தாம்அங்கிருந்து வெளியேறியதாக இவர் தெரிவித்திருக்கின்றார்.

### அணுக்குண்டுப் பரீட்சை

அமெரிக்கரோ அன்றேல் ருஷியரோ அணுக்குண்டுப்பரீட்சைகளைத் தங்கள் ஆதிக்கத்திலுள்ள இடங்களில் நடத்தலாம. ஆனால், அங்கிருந்து தோன்றும் அணுக்கதிர் இயக்கம் அந்நாடுகளைமாத்திரமல்ல, காற்றில் கலந்து அகிலமுழுவதையுமே பாதிக்கும். அணுக்கதிர் இயக்கத்தினால் சனசமுதாயத்தின் ஆரோக்கியத்திற்கு ஏற்படக்கூடிய தீமைகளைப்பற்றி விஞ்ஞானிகள் எத்தனையோமுறை எச்சரித்திருக்கிறார்கள். அதனால்தான் அணுக்குண்டுப்பரீட்சைகள் எந்த இடத்திலும் நடைபெறுவது பலமாக எதிர்க்கப்படுகிறது.

*  *  *

● சோவியத்ருஷியா மற்றுமோர் அணுக்குண்டைச் சென்ற 2-ந் திகதியன்று பரீட்சித்திருப்பதாக அமெரிக்க அணுச்சக்திக்கமிஷன் அறிவித்துள்ளது. புரட்டாசி 1-ந் திகதியன்று ருஷியா அணுஆயுதப் பரீட்சைகளை மீண்டும்ஆரம்பித்தபின் இதுவரை பதினாறுஅணுக்குண்டுகளை அதுபரீட்சித்துள்ளது. கடைசியான பதினாறுவதுகுண்டு வடசமுத்திரபிரதேசத்திலே பரீட்சிக்கப்படலாயிற்று.

● இம்மாதம்4-ந்திகதி புதன்கிழமையை வழமைபோல ஐக்கியஅமெரிக்கதேசம் ஒருதேசிய பிரார்த்தனைத்தினமாக அனுஷ்டிக்கலாயிற்று. ஜனாதிபதிகென்னடி அமெரிக்க மக்களுக்கு விடுத்தவேண்டுகோளிலே, "நமது காலத்தில் சமாதானமும், மனிதகுலத்திற்குச் சுதந்திரமும், நீதியும், கண்ணியமும் ஏற்படுமாறு பிரார்த்திக்கவேண்டு"மென்று அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

● சோவியத்ருஷியா சென்ற6-ந் திகதியன்று யூறேஷிய பிரதேசத்துக்கப்பால் பதினேழாவது அணுக்குண்டையும் வானமண்டலத்தில் வெடிக்கவைத்துப் பரீட்சித்திருப்பதாய் அமெரிக்க அணுச்சக்திக்கமிஷன் அறிவித்திருக்கிறது. பதினேழுஅணுக்குண்டுகளும் நிலமட்டத்தின்மேல் வைத்துப் பரீட்சிக்கப்பட்டமையாலே உலகின் பலபாகங்களிலும் அணுக்கதிரியக்க வீழ்ச்சி அதிகரித்துள்ளது.

● இந்தியபிரதமர்நேரு சென்ற 6-ந்திகதிவெள்ளிக்கிழமை மதுரையிலே உலகவிவகாரங்கள்பற்றிக் குறிப்பிட்டபோது: உலகில் வேற்றுமைகளும், பூசல்களும் மலிந்துவிட்டதாகவும், விஞ்ஞான–தொழில் நுட்ப அபிவிருத்திகளைத் தானும் மனிதன் சமாதானத்திற்கும், அபிவிருத்திக்கும் பயன்படுத்த முடியாதிருந்துவருவதாகவும், மனிதர் ஒருவரையொருவர் அழிக்கவே முயல்வதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி மாதம் 1961

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | ஞா. | 2 | **பெந்தெக்கோஸ்தின்பின் 21-ம் ஞாயிறு** | (வி. ம.) | ப. |
| 16 | தி. | | அர்ச். எட்வீசம்மாள் | | வெ. |
| 17 | செ. | | அர்ச். மார்கரீத் மரியா அலக்கொக் அம்மாள் | | வெ. |
| 18 | பு. | 2 | **அர்ச். லூக்கா** | (வி. ம.) | வெ. |
| 19 | வி. | | அர்ச். அல்காந்தரா இராயப்பர் | | வெ. |
| 20 | வெ. | | அர்ச். கான்சியுஸ் அருளப்பர் | | வெ. |
| 21 | ச. | ம | மரியாயின் சனி (அர்ச். கில்லாரியோன், ஊர்சுலம்மாள் தோழர் ஞா) | | வெ. |

சத்திய வேத

பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 14-ந் திகதி

## உலகசமாதானமும் செபமாலையும்

பரிசுத்தபிதா அருளப்பபாப்பரசர் சென்றபுரட்டாசித்திங்கள் 10-ம் திகதியன்று உலகதலைவர்களுக்கெல்லாம் பெரிதும்மனஆத்திரத்துடன் ஒருசமாதானவேண்டுகோள் விடுத்தருளினர். இதனைக் கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர்கள் அல்லாதவரும், விசுவாசிகளும், அவிசுவாசிகளுமாய்ச் சமாதானநாட்டத்தில் ஐக்கியம்பூண்டுள்ள அனைவருக்குமே அவர் விடுத்தருளினர். ஆனால், இப்போதோ அவர் தமதுசொந்தஞான மந்தையைச்சேர்ந்த ஞானமக்கள்பால் தம்முடைய கவனத்தைத் திருப்பிச் சமாதானத்தின்பாதையானது செபத்தினலன்றி மற்றெந்தவிதத்தினலும் ஒருபோதுமே கண்டடையப்படவில்லையென அறிவுறுத்துகின்றார். அதாவது, சமாதானத்தைப் பாதுகாத்தருளுமாறு உலகதலைவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுத்து இன்னும் மூன்றுவாரங்கள் செல்லாமுன்னரே அவர் மற்றுமொரு சமாதான வேண்டுகோளை விடுத்திருக்கின்றார். புரட்டாசித்திங்கள் 29-ந்திகதியைக்கொண்டதாய் உலகிலுள்ள மேற்றிராணிமார்களுக்கும், விசுவாசிகளுக்கும் அவர் விடுத்திருக்கும் அப்போஸ்தலிக்க திருமுகம்ஒன்றில், செபமாலையின் மூலம் உலகசமாதானத்தைக் பாதுகாத்துவைக்குமாறு செபப்படையணிஒன்றைத் தொடக்கிநடத்துமாறு அனைவரையும் பெரிதும் மனஆர்வத்துடன்கேட்டுத் திருச்சபைக்கும், தேசங்களுக்கும். அகில உலகத்திற்கும் சாதாரண—அசாதாரணதேவைகள் ஏற்பட்டிருந்த அநேகாநேக சந்தர்ப்பங்களிலெல்லாம் செபமென்ற இந்தஅற்புத சாதனம் உலகத்திற்கு உறுதுணையாய் இருந்துவந்திருப்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

மனிதவர்க்கம் வாழ்வதா? அன்றேல் மாள்வதா? என்ற ஈரொட்டான நிலைமையிலே இன்றையஉலகம் தத்தளித்துக்கொண்டிருக்கின்ற அபாயகரமான ஒருசந்தர்ப்பத்திலே அருளப்பபாப்பரசர் கத்தோலிக்க வாழ்க்கையில் செபமாலையின் அபூர்வஸ்தானத்தை மிகவும்தெளிவாக விரித்துரைத்து, அதிகம்நெருக்கடியான காலங்களிலும், ஆவசியகதேவைகள் ஏற்பட்டிருந்தகாலங்களிலும் மரியன்னையிலும், அவர் திருமகனரிலும் நம்பிக்கைவைத்திருந்தவர்களைத் தஞ்சமாயிருந்து தற்காத்துவைத்தது செபமாலையே என்பதைத் தமதுதிருமுகத்தில் ஆணித்தரமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். மேலும் அவர்செபமாலையைப்பற்றிப் பதின்மூன்றும்சிங்கராயபாப்பானவர் எழுதியுள்ளவைகளை முக்கியமாகக் குறிப்பிட்டு முன்னர்பலமுறைகளிலும்சொல்லப்பட்டுவந்துள்ள பெருங்குறையை—அதாவதுஉலகம் கிறீஸ்துநாதரிலிருந்துதூரஅகன்றுபோய்க்கொண்டிருப்பதாகிய பெருங்குறையை அவர்திரும்பத்திரும்ப அழுத்தமாகக் குறிப்பிட்டு, இதற்குத்திவ்வியமான சிறந்தமாற்றுமருந்து செபமாலையேயெனத் தெரிவித்திருக்கின்றார். இன்னும் சிங்கராயபாப்பானவர் கூறியவற்றுடன் நின்றுவிடாது, அவரைத்தொடர்ந்துவந்த ஏனைய பாப்புமாரும் செபமாலையின்முக்கியத்தையும், கத்தோலிக்க வாழ்க்கையிலே அதன்முக்கியபாகத்தையும் மீட்டும்மீட்டும் வற்புறுத்திக் கூறியிருப்பதை அவர் எடுத்துக்காட்டி, ஓர்எடுத்துக்காட்டாகப் பத்தாம்பத்திநாத பாப்பானவர் செபமாலையென்ற அன்பளிப்பைத் தமது ஞானமரணசாதனப் பொருளாகக் கத்தோலிக்கஉலகத்துக்கு வழங்கிப்போவதாகத் தெரிவித்து எழுதியுள்ளதைப் பின்வருமாறு எடுத்துக்கூறியிருக்கின்றார்.

"செபமாலையானது சகலசெபங்களிலும் மகாஅலங்காரமும், மகாவரப்பிரசாத வளமுடையதுமாகும்......ஆகவே, செபமாலையை நேசியுங்கள். அதனைப் பக்திவேகத்துடன் செபியுங்கள். நாம் உங்களுக்குவிட்டுப்போகும் மரணசாதனப்பொருள் இதுவாகும். அதனால் இதைக்கொண்டு நீங்கள் நம்மை நினைவுகூர்ந்துகொள்ளலாம்" என்பதே. செபமாலையைக்கொண்டு இந்தஅபாயகரமான வேளையிலே உலகசமாதானத்தை—உலகத்தைக் காத்துவைக்கவேண்டுமென்று நமது அருளப்பதந்தை ஆசிக்கின்றார். உலகமடங்கலும் பரந்திருக்கின்ற தமது ஞானமக்களான நாற்பது கோடி கத்தோலிக்கரும் பந்துக்கட்டாகத்திரண்டெழுந்து இச்சந்தர்ப்பத்திலே—விசேடமாகச் செபமாலைமாதமாகிய இந்தஐப்பசிமாதத்திலே செபமாலையைக் கையிலெடுத்து, பரலோகத்தைக் கையெடுத்து, பரமஅன்னையிடம் உலகுக்குச் சமாதானத்தைக் கேட்குமாறு எல்லோரையும் ஆவலுடன்வேண்டுகின்றார். ஆம், பாரமானகடமை ஒன்று—அதாவது உலகத்திற்குச் சமாதானத்தைப் பெற்றருள்வதாகிய பெரும்பாரமான கடமைஒன்று நம்மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. உலகசமாதானத்தைக் கண்டடையும்வழியைப் பரிசுத்ததந்தை காட்டியிருக்கின்றார். அதனால் அதைக் கண்டடைவது நம்மில்தான் – நமது செபமாலையில்தான் தங்கியிருக்கிறதுஎன்பதை நன்குணர்ந்து நம்பிக்கையுடன் செபமாலைசொல்லிவருவோமாக.

---

● பிரித்தானிய சர்வகலாசாலைகள் சென்ற1959-ம்-60-ம்ஆண்டின் கலாசாலைவருடத்தில் விஞ்ஞானஆராய்ச்சிக்கென 2கோடியே 59 இலட்சம் பவுண் செலவிட்டிருக்கின்றன. அவற்றிலே விஞ்ஞானஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஒவ்வொருமாணவனும் சராசரிவீதமாக 2,140பவுண் செலவிட்டிருக்கிறான்.

# இருளில் ஒளி

## — 22 —

**(இந்த மந்தைக்குச்சேராத வேறு ஆடுகளும் உண்டு; அவைகளும் இங்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்.)**

சங். சிஸ்ரர் செசிரா எப். எம். ஏ. எழுதுவது:

அத்தம்பதிகட்கிடையே திருமணம்நிறைவேறிப் பதினெட்டுஆண்டுகளின்பின் பிறந்தவள் கரோல். எனவே, அச்செல்வி விரும்பிக்கேட்கும் எதையும் மறுப்பதில்லை அவள் பெற்றோர்.

தனது விளையாட்டுத்தோழர்கள் அடிக்கடி தத்தம்பெற்றோருடன் ஆலயத்துக்குச்சென்று வழிபடுவதை அவதானித்தாள் சிறுமி கரோல். தானும் அவ்வாறுசெய்ய ஆசித்தாள். அவளது பெற்றோர் எம்மதத்தையும் சார்ந்தவர்களல்லர். தங்கள் பிரியபுதல்வியின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய அந்நகரின் பலதேவாலயங்கட்கும் அவளை அழைத்துச் சென்றனர்.

எனினும், கத்தோலிக்க தேவாலய நிகழ்ச்சிகளே சிறுமியையும், பெற்றோரையும் அதிகம் கவர்ந்திருக்கவேண்டும். ஏனெனில், சில வாரங்கட்குப்பின்னர் ஞாயிறுதோறும் தவருது திவ்விய பூசைப்பலிக்கும், மாலையாராதனைகட்கும் சமூகமளித்து வந்தனர்.

தங்கள் புதல்விக்காக ஆலயம்செல்ல ஆரம்பித்த அத்தம்பதிகள் தங்கள் சொந்த ஆன்மாவின் நிலையையும் உணர்ந்தனர். கரோல் கத்தோலிக்க பாடசாலையில் சேர்க்கப்பட்டாள். அவளது பெற்றோரும் ஞானோபதேச வகுப்புகட்குக் கிரமமாகச் சென்றனர். சில வாரங்களின்பின்னர் மூவரும் ஞானமுழுக்குப்பெற்றுக் கத்தோலிக்க மறையுள் சேர்ந்தனர். இன்று மூவரும் அடிக்கடி ஆலயம்செல்லத் தவறுவதேயில்லை.

(சா. பெ.)

# இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப் பின்வரும் 21-ம் ஞாயிறு

— சுவாமி மைக்கல் றொட்ரிக்கோ —

இன்றைய பூசைச்செபங்கள் கிறிஸ்தவனின் ஞானயுத்தத்தைக் கருத்தாகக் கொண்டுள்ளன

**பிரவேச வாக்கியம்:** எங்கள் ஞான எதிரிகளுக்குக் காட்டவேண்டிய எதிர்ப்பைக் குறிக்கின்றது.

**சபைச் செபம்:** எமது ஞான எதிரிகளிடமிருந்து ஆத்தும பாதுகாப்பையும், அதனல் கடவுளுக்குக் காட்டவேண்டிய நன்றியையும் தெளிவுபடுத்துகின்றது.

**நிருபம்:** பசாசின் தந்திரங்களை எதிர்த்துத் தடுப்பதற்காகச் சருவேசுரனுடைய போர்ஆயுதங்களைத் தரிக்கும்படி நினைவூட்டுகிறது.

**படிக் கீதம்:** கடவுள் மாத்திரமே எங்கள் அடைக்கலம்.

**அல்லெலூயாக் கீதம்:** எகிப்தில் இருந்து இஸ்ரூயேல் சனங்கள் வெளிப்படுதலை நினைவூட்டுகிறது.

**சுவிசேஷம்:** தொண்டை நெரிக்கப்பட்ட ஊழியனையும், இவனுக்கு இடையூறுவருவித்த ஊழியன் சிறைச்சாலைக்குச் செல்வதையும் உணர்த்துகிறது.

**பொறுமையும், விடாமுயற்சியும்:** கிறிஸ்துவின் பொறுமையே ஆத்துமத்தை நசுக்குபவர்களை அடக்கி, ஆத்துமத்திற்கு உண்மையான சமாதானத்தைக் கொண்டுவரும். மனிதனின் உலகசீவியம் ஒரே போர்க்களம். உலகம், சரீரம், பசாசு இவைகளுக்கெதிராகவே இந்த யுத்தம். இப்போராட்டம் மரணத்தோடு முடிவுபெற்று, நித்தியசீவியத்தைச் சன்மானமாகக் கொண்டுள்ளது. "கிறிஸ்தவனே, உன் போராட்டம் முடிவுபெற்றது; சமாதானமாக நித்தியத்தில் இளைப்பாறுவாயாக." நாங்களும் எமது உலகசீவியநாட்களில், எங்கள் அயலாருடன் பொறுமையாக இருக்கவேண்டும் என்பதை நினைவு கூரவேண்டும். ஏனெனில், "நீங்கள் எந்த அளவைக் கொண்டு அளப்பீர்களோ அதைக் கொண்டே உங்களுக்கும் அளக்கப்படும்." நாம் கிறிஸ்தவ மனப்பான்மையோடு இறுதிவரை முயற்சிக்கவேண்டும். பலவழியில் மோட்சராச்சியத்தை அடையமுடியும்; ஆனல் நம்அயலாரிடம் இருந்து எமக்குவரும் கஷ்டங்களைக்கண்டு பொறுமையுடன் சகிக்கும் வழியே மிகச்சிறந்தது. இவைகளை நாம் போதனையில் மாத்திரம் தெரிந்தால் போதாது, சாதனையிலும் காட்டவேண்டும்.

**செபமும், உபதேசமும்:** இதுவே அவரின் திருவுளம்; அதைஎதிர்த்து நிற்கக்கூடியவன் ஒருவனுமில்லைஎன்று பிரவேச வாக்கியம் கூறுகின்றது. சபைச்செபத்தில் "கடவுளின் பாராமரிக்கையால் எமதுகுடும்பங்கள் காப்பாற்றப்படவேண்டும் என்று வேண்டுகின்றோம். அதேவிதத்தில் எமது அயலாருக்காகவும் மன்றாடவேண்டும். ஆனல், எமது நற்கருத்துக்களைச் சாத்தானின் தடைகள் எதிர்த்துநிற்கின்றன. ஆகையால், நாம் சாத்தானின் தடைகளை எதிர்க்கவேண்டியதே தவிர, கடவுளின் சித்தத்தையல்ல.

**நிருபம்:** கடவுளின் ஆவி, யுத்தத்திற்குவேண்டிய ஆயுதங்களைத்தந்து உதவுவார். அரைக்கச்சையாகச் சத்தியத்தையும், மார்புக்கவசமாக நீதியையும், கேடயமாக விசுவாசத்தையும் அணிந்துகொள்ளுங்கள். உங்கள் அந்தரங்கத்தில் தூயஆவியை ஆட்சிசெய்யவிடுங்கள். அவர்மட்டில் பொறுமையாகவும், சாத்தான்மட்டில் எதிரியாகவும் இருக்கவும்.

**சுவிசேஷம்:** சமாரித்த பெண்ணுக்கும், மரியமதலேனளுக்கும், இராயப்பருக்கும் மன்னிப்பளித்தவர், இன்று சுவிசேஷத்தில் அநீதியான ஊழியனின் கதையைக் கூறுவதை ஆழ்ந்த சிந்தனையுடன் கேட்போமாக.

**பலிநிறைவேறு பாகம்:** ஒப்புக்கொடுத்தல் செபத்தில் எமது பொறுமையின்மைகளை ஒப்புக்கொடுப்போம். தம்மைத் தீர்வையிட்ட பிலாத்துவையும், ஏரோதாசனையும் அழிக்கும் வல்லமை இருந்தும் பொறுமையை மிக உன்னதமாக, மவுனமாக அனுபவித்த யேசுவிடம், எழுந்தேற்ற நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ அன்னை இரட்சணியத்தின் பாதை

"அன்னை", "அன்பு" என்ற இவ்விரு சொற்களிலும் புதைந்துகிடக்கும் ஆழமான கருத்துக்களை நன்கு உணர வேண்டுமாயின், அன்புள்ள ஓர் அன்னையைத்தான் நோக்கவேண்டும். அன்பு என்ற சொல்லிலிருந்து அன்னையைப் பிரித்துவிடலாம். ஆனால், அன்னையிலிருந்து அன்பைப் பிரித்துவிட முடியாது. எந்த மானிடனின் வாழ்க்கையிலும் அன்னை ஒருமுக்கியபாகத்தை வகிக்கிறாள். பத்துமாதம் சுமந்து, பெற்றெடுத்த அன்னை தனது செல்வக்குழந்தையைத் தனது கண்மணிபோலப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கிறாள். பாலகன் எப்போது பருவமடைவான், தனது இன்பக் கனவுகள்யாவும் எப்போது நனவாகுமென ஏங்கித்தவிக்கின்றாள். தன் மகனைத் தனது வாழ்வின் மையமாகக் கருதுகின்றாள் பெற்றெடுத்த தாய். அதுபோலவே, புதல்வனும் தனதுதாயிலே அன்புகொள்கிறான். தன்னைச்சுற்றித் துன்பஅலைகள் எவ்வாறு மோதியபோதிலும், தாய் என்றஎண்ணம் அவனுக்கு ஆறுதல் அளிக்கின்றது. தாயும் காத்திருந்து தன் செல்வமகனின் துன்பம் துடைக்கிறாள். இதுதான் மகன்மேல் தாய்க்கும், தாய்மேல் மகனுக்கும் இருக்கும் அன்பும், பட்சமும்.

நாம்யாபேரும் எங்கள் தாய்மாரைப் பற்றிப் பெருமையுடன் தட்டிப்பேசுகிறோம். ஆனால், இந்தத் தாய்மார்களை விட எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அன்புத்தாய் இருக்கிறாள். ஆதாமின் சந்ததியிலே பிறந்த ஒவ்வொருவரும் சென்மபாவத்தினாலே கட்டுண்டு, தேவசாபத்துக்குள்ளாகித் தவித்தனர். மோட்சவாசல் அவர்கட்கு மூடப்பட்டிருந்தது. தேவனுக்கும், மனிதனுக்குமிடையில்உள்ள அன்புக்கயிறு வெட்டப்பட்டது. ஆனால், அக்கயிற்றைத் திரும்பமுடிவதற்கு— மனிதனுக்கு மோட்சவாசலைத்திறந்து இரட்சணியத்தை அளிப்பதற்குக் கடவுள்வரவேண்டி ஏற்பட்டது. யேசுதேவன் சிலுவைமரத்திலேதொங்கிச் செய்துமுடித்த அந்த இரட்சணிய வேலையிலே இந்த உலகத்தில்பிறந்த ஒருபிறவிக்கு ஒரு முக்கியபங்கு இருக்குமாயின் அது எமது தேவதாய்க்குத்தான். ஏனெனில், அவள்தான் ஆதாம் பாவத்தில் தவறிவிழுந்தகாலத்திலிருந்தேசருவேசுரனால் தெரிந்தெடுக்கப்பட்டவள், ஆதாமைப் பாவத்தில்விழுத்திய பசாசைச் சபிக்கும்போது, "அவள் உன் தலையை நசுக்குவாள்" என்று தேவதாயைக்குறித்துக் கடவுள்கூறினார். இவள் ஆதிகாலம்தொட்டுக் கடவுளின் வருகைக்காக ஆயத்தம்பண்ணப் பட்டவள்; யேசுதேவனைப் பத்துமாதம் சுமந்துபெற்றெடுத்தவள்; அவருடைய மொழிகளைக்கேட்டு அவருடன் முப்பதுவருடகாலமாக வாழ்ந்துவந்தவள் எமது தாய்என்பதை நாம் பலதடவைகளில் மறந்துவிடுகின்றோம். யேசுநாதர் சிலுவையிற்தொங்கி நம்மை இரட்சித்தபொழுதும் அவரதுசிலுவையடியில் நின்றவள் தேவதாய்என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். எனவேதான், அன்புத்தேவன் — யேசுவின் இரட்சணியஅலுவலில் கன்னிமரியாய்க்கு ஒருசிறப்பானபங்கு இருக்கின்றது என்பதை நாம் ஒருபோதும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

யேசுநாதர் எங்கள் சகோதரர். எனவே, அவர்வழியாய் நாம் இரட்சணியம் அடையவேண்டுமானால்— மோட்சவாசல் எங்களுக்குத் திறக்கப்படவேண்டுமானால் அவருடைய அன்புத்தாயிடம் நாம் செல்லவேண்டும். அவள்மேல் நமது அன்பையும், நம்பிக்கையையும் வைக்கவேண்டும். கரடுமுரடான எமது வாழ்க்கைப் பாதையிலே இதோ உறுதுணையாய் இருக்கிறாள் எமது பரலோகஅன்னை. குழந்தை தனக்கு ஒருதுன்பம் ஏற்பட்டபோது "அம்மா" என்று அலறிக்கொண்டு எப்படித் தன்தாயிடம் ஓடிச்செல்லுமோ அதேபோல்நாமும்பசாசு தனது வலையை வீசும்பொழுது "பாவிகளின் அடைக்கலமே!" என்று தேவஅன்னையிடம் கதறிஓடவேண்டும். உடனே எமது அன்புத்தாய் இருகைகளாலும் எம்மை அரவணைப்பதை நாம் உணர்வோம். தேவதாயின் உதவியோடு நாம்எல்லோரும் முழக்கம்போடும் மேகங்களாகவும், வல்லபதேவனின் கரங்களிலிருக்கும் அம்புகளாகவும் மாறிவிடுவோம். அவள் நம்தாய்என்ற தளராதவிசுவாசம் நம்எல்லோருக்கும் ஒரு புத்துணர்ச்சி அளிக்கும்.

யேசுநாதர் தேவதாயை எப்படி நேசிக்கிறார்என்பதை வல்லமையற்ற எமது பேனாமுனைகள் சித்திரிக்கத் தயங்குகின்றன. நசரேத் என்னுமோர் எளியகிராமத்திற்பிறந்து, வறுமைஎன்னும் பாதையிலேநடந்த மரியாயை அளவுகடந்தவிதமாக நேசித்தார். தமது வரப்பிரசாதங்கள் யாவையும் மாரியாகப்பொழிந்தார். அதுமட்டுமா? உலகம்போற்றும் வல்லதேவன், அவளைத் தமது தாயாராக்கினார். உலகம் முழுவதும் அவளுக்கு அடிபணியும்படி செய்தார். பசாசின்தலையை நசுக்கும் வல்லமையை அளித்தார். பாவக்கறையுற்ற மாந்தரின் இரட்சணிய வேலையிலே அவளுக்குஓர் முக்கியபங்கை அளித்தார். இதுதான் அவளின் மகத்துவம்— இதுதான் கடவுள் இப்பெண்மணிக்குஅளித்த மகிமை— இதுதான் கடவுள் அவள்மேல்கொண்ட அன்பு.

இவ்வரியதாயை இவ்வளவாக நேசித்ததேவன், நாம்எல்லோரும் அவளை அதிகமாக நேசிக்கவேண்டுமென்றும், அவளிடம் நமதுதேவைகள் யாவற்றிற்கும் அடைக்கலம் புகவேண்டுமென்றும் விரும்புகிறார். சுருக்கமாய்க் கூறவேண்டுமானால் நாம் இரட்சணியம் அடைவதற்கு ஒருசுருக்கமானதும், நிச்சயமானதுமான பாதையொன்றை எமக்குக் காட்டியிருக்கிறார் — எமது தேவதாய். இவ்வன்புத்தாயைப் போற்றி ஆயிரக்கணக்கான புத்தகங்கள் நூற்றுக்கணக்கான மொழிகளிலே வெளிவந்துள்ளன. ஆங்காங்கு அழகிய ஆலயங்கள் இவளுக்கு ஓர்புகழ் மாலை சூட்டிநிற்கின்றன. இவள்மேல் அன்புகொண்டபக்தர்கள்பலர் சமுத்திரத்தின் தாரகையென்றும், விடியற்காலத்தின் நட்சத்திரம்என்றும், மோட்சத்தின் இராக்கினியென்றும் இவளைப் புகழ்ந்திருக்கின்றனர்.

இவைகள்எல்லாம் உண்மையாகவே இத்தாய்க்குப் புகழைஅளித்திருக்கின்றன. ஆனால், அவளுக்கு அளவுகடந்த விருப்பத்தை வருவிக்கக்கூடியது இன்னும் ஒன்றுஉள்ளது. அதைச் செபிப்பதாலே எமக்குஒருபுதிய தைரியம்உண்டாகும்; கேட்பதெல்லாம் கிடைக்கும்; ஆபத்துவேளையிலே அடைக்கலம்அளிக்கும்; அந்தரித்தபொழுதிலே ஆறுதல் கொடுக்கும். அதுதான் பரிசுத்த செபமாலை. அவளுடைய புகழைஎழுதி உலகெங்கும்பரப்ப முடியாதோர்க்கு மட்டுமல்ல அப்படிச் செய்யமுடிந்தோர்க்கும் அத்தியாவசியமான ஒருசெபம் செபமாலை. இதுதான் மோட்சத்தின் ஏணி; பசாசுக்கும் பதில்.

"பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே வாழ்க! ..........." "அர்ச்சியசிட்ட மரியாயே, சருவேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும், எப்பொழுதும் எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்." இப்படி ஐம்பத்துமூன்றுதடவை நாம் தேவதாயை நோக்கி இரந்துகொள்வதைக் கேட்டுக்கொண்டு அவள் சும்மாஇருக்க முடியுமா? "அம்மா! அம்மா" என்று குழந்தை அலறுவதைக் கேட்டுக்கொண்டு தாயானவள் சும்மாவிருப்பாளா? அன்புடன் ஓடிவருவாள்; அரவணைப்பாள் எமது உலகத்தாய். ஆனால், அதிலும் ஆயிரம்மடங்கு இரக்கமும், அன்பும்உள்ளவள் எமதுதேவதாய். இத்தகைய அன்புகாட்டும் அன்னைக்கு நாம் உவந்தளிக்கும் ஒரு இன்பப் புகழ்மாலை செபமாலை. பள்ளி மாணவன்தொட்டு முதியோரின் சாவுப் படுக்கைவரையிலும் காணப்படவேண்டிய ஒரு பரிசுத்தபொருள் செபமாலை.

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

---

மன்றாடுவோமாக. பலநூற்றாண்டுகளாகத் திருச்சபைக்கெதிராக வந்த கஷ்டங்கள் துன்பங்களை மௌனமாகச் சகித்துத் திருச்சபையைக் காப்பாற்றி வந்திருக்கிறார்—யேசு.

அனுபவிப்புச் செபங்களில் சகல உபத்திரவங்களில் அடைக்கலமாய் இருக்கும் நித்திய உணவிற்காக மன்றாடுவோம்.

---

விற்பனைக்கு

## திருச்சடங்குக் கோவை

பிரதி விலை: 3-50

இடைக்குமிடம்:

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---



## தொ. இ. இராசையா அவர்களின் 3-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு: 27-12-1879 இறப்பு: 21-10-1958

இவ்வுலகைவிட்டு மறைந்தும், எமது மனதகலைவிட்டு அகலாத எங்கள் பிரிய தந்தையாகிய தொம்மைப்பிள்ளை இராயப்பு இராசையா அவர்கள் இப்பூவுலகைவிட்டுமறைந்த 3-ம்வருட நினைவுதினம் 21-10-61-இல் பூர்த்தியாகிறது. அன்று காலை 6-30 மணிக்கு மாதகல், அர்ச். தொம்மைஅப்போஸ்தலர் ஆலயத்தில் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதனைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளையும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளையும், அன்புள்ள கிறிஸ்தவர்களையும் இவருக்குத் தேவன் நித்தியஇளைப்பாற்றியை அருளுமாறு மன்றாடும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

அரிய தந்தையின்பிரிவால் துயருறும்
பிள்ளைகள்:
தொ. இ. பெனடிக்ற்,
தொ. இ. மரியதாசன் இராசரத்தினம்,
மேரி திரேசா அந்தோனிப்பிள்ளை.
மாதகல்

---

## நன்றித்துதி

பரிசுத்த சதாசகாயநாயகி, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு, முத். மாட்டின் தெபோரஸ் இவர்களின் உதவியினால் நான்கேட்ட மன்றாட்டுக் கிடைத்தது. நேர்த்திப்படி இதனைப் பிரசுரஞ்செய்கின்றேன். காலதாமதத்திற்காக மன்னிப்புக் கோருகின்றேன்.

அடியான்

---

## அர்ச். யூதாவின் திருநாள்

மேல்மாகாணத்திலே
கம்பஹா. விசாரணைப் பங்கிலுள்ள
**இண்டிக்கொலாவில்**
கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான
**அர்ச். யூதாவின் திருநாள்**
ஆயத்த நவநாட்கள் அக்டோபர்மாதம் 27-ந்திகதி ஆரம்பமாகின்றன.
அக்டோபர் 28-ம்திகதி (சனிக்கிழமை)
அர்ச்சியசிட்டவரின்
திருவழிபாட்டுமுறைத் திருநாள்.
மாலை 6மணிக்குப் பெரியபாடற்பூசை.
அக்டோபர்
29-ந்திகதி (ஞாயிற்றுக்கிழமை)
செட்டிகுலத்தவரின் ஆதரவிலே
காலை 8மணிக்குப் பெரிய பாடற்பூசை.
**நவம்பர் 4-ந்திகதி சனிக்கிழமை**
மாலை 6-30மணிக்கு வெஸ்பர்ஸ்ஆராதனை.
**நவம்பர் 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை**
காலை 5மணிமுதல் செபப்பூசைகள்.
காலை 9மணிக்குப் பெரிய பாடற்பூசை.
தொடர்ந்து திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதமும், சுற்றுப்பிரகாரமும்.
கடைசிப்பூசை காலை 11மணிக்கு.
எல்லோரும் அழைக்கப்படுகிறார்கள்

**கார்மேல்சபைக் குருமாரின்
சுப்பீரியர்**

இன்டிக்கொலா

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3535**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி தெற்கு
1. வயித்தியநாதர் பரமநாதரும்,
2. பெண் புவனேஸ்வரியும்

— வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கு
1. சின்னையா சிவசம்புவும்,
2. பெண் செல்லமுத்துவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 3535-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1961-ம்ஆண்டு கார்த்திகைமீ 25-ம்உ (25-11-61) சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4,523. இன்னும் ரூபா 3,000-த்திற்கு 28-7-60 தொடக்கம், 16-12-60 வரையும் 100-க்குப் 12%வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 226ரூபா 55சதம். இதில் ரூபா 1,120 கொடுபட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோயிற்பற்று, திருநெல்வேலியிலுறை "அலமங்கை" ப. நி. இ. 5-உம், வீடும், போட்டிக்கோவும், கிணறும், வடக்கெல்லைக் காணியின் கிணற்றில் பங்கும், வழிவாய்க்காலும். எல்லை: கிழக்கு— ரோட்டு. வடக்கு — சின்னப்பு இரத்தினசபாபதியின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு — பண்டாரம் கணபதிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு — பொன்னம்பலம் செல்லத்துரையினதும், பெண் செல்லம்மாவினதும் ஆதனம். இதில் சொரியலாய் ப. நி. இ. 4

2. ஷெ திருநெல்வேலியிலுறை வடலித்தோட்டம் ப. நி. இ. 1½-யும், பனைகளும். எல்லை: கிழக்கும், வடக்கும் — தம்பு கணபதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு — ரோட்டு. தெற்கு — இராசையா பெண் மாணிக்கத்தின் ஆதனம். இதடங்கலும்.

தா. செல்லையா,
கோமிஷனரும், விலமதிப்பாளரும்
37, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## சோம்பேறியின் கனவு

அர்ச். ஆன்ஸ்காரியார் என்பவருக்கு ஐந்துவயது நடக்கும்போது அவருடைய தாய் மரணம் அடைந்தாள். அவர் உறவினர் அவரை அருகிலுள்ள பள்ளிக்கு அனுப்பினார்கள். அவர் வெகு சோம்பேறியாய் இருந்தமையால், ஆசிரியருக்குக் கீழ்ப்படியாமல் இருந்துவந்தார்.

ஒருநாள் அவர் பள்ளிக்கூடத்தில் இருக்கும்பொழுது ஒரு கனவு கண்டார்: அதாவது, தான் ஒரு சேற்றுப் பாதை வழியாகப் போய்க்கொண்டிருக்கக் கண்டார். அப்பாதை வெறும் சேருக இருந்தது. அப்போது அவர் மறுபக்கம் திரும்பிப் பார்த்தார். அங்கும் ஒரு பாதை இருந்தது. அங்கு பலவிதமான பழவகைகளும், வாச மலர்களும் இருந்தன. அப் பாதைவழியாகத் தேவதாயும், சிலபெண்களும், அவருடைய தாயாரும் வந்தார்கள். தனது தாயைக் கண்டவுடன் அவளிடம் ஓடிப்போகத் துடித்தார். ஆனால், அவரால் நகர முடியவில்லை.

அவருடைய கால் சேற்றில் நன்ருகப் புதைந்திருந்தது. அப்போது தேவதாய் அவரை அணுகி, "ஆன்ஸ்காரியே! நீ எங்களுடன் வர முடியாது; நீ ஒரு கெட்டவன்; எவருக்கும் கீழ்ப்படியாதவன்; ஆகையால், உனக்கு மோட்சபாக்கியம் கிடையாது; நீ நல்ல பிள்ளையாய் நடந்து எல்லாருக்கும் கீழ்ப்படிவாயானுல் உனக்கு மோட்சபாக்கியம் கிடைக்கும்" என்று சொல்லி மறைந்தாள்.

ஆன்ஸ்காரியார் துயில்விட்டெழுந்தார். தான் கண்டது கனவுதான் என்று எண்ணிக்கொண்டார். ஆனுல், அப்படிப்பினை அவரைவிட்டு அகலவில்லை. ஆதலால், அந்நாட்தொடக்கம் எல்லோருக்கும் கீழ்ப்படிந்து நடந்தார்.

ஆகையால், நாமும் மற்றவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். இச்சரித்திரத்திஞல் கனவை நம்பவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனுல், சில சமயங்களில் சருவேசுரன் அதனுல் நல்ல புத்தி படிப்பிக்கின்ருர்.

## சிறுவர் அறிவுச் சக்கரம்—7

### சரியான விடைகள்

— I —

1. அர்ச். மார்த்தம்மாள்.
2. அர்ச். இஸ்நாபக யுவானியார்.
3. 10-ம் பத்திநாத பாப்பரசர்.
4. 13-ம் சிங்கராய பாப்பரசர் (13-ம் லீயோ.)
5. அர்ச். ஜெரோம்.
6. 13-ம் சிங்கராயர்.

— II —

1. மார்கழிமாதம் 28-ந் தேதி.
2. யேசுநாதர் மலைப்பிரசங்கத்தின் போதுபோதித்த எட்டுப் பாக்கியங்களே சுவிசேஷ பாக்கியங்களாம்.
3. விசேஷமாய்ப் பாவச்சமயங்களை விலக்கவேண்டும்.
4. தாவீது.
5. இரபாயேல் சம்மனசு (இறப்பியேல்.)
6. 1869-ம் ஆண்டு மார்கழி முதல் 1870-ம் ஆண்டு ஐப்பசிவரை (1869 – 1870.)

### விடை அனுப்பியவர்கள்

இம்முறை எவரும் முழுதும் சரியான விடைகளை அனுப்பவில்லை. ஒரு பிழையுடன் விடை அனுப்பியவர்கள்:

1. எஸ். ஏ. செல்வராசா, அர்ச். என்றியரசர் கல்லூரி, இளவாலை.
2. பி. நீற்றம்மா, ரோ. க. த. பெ. பாடசாலை, இளவாலை.

---

**அன்புத் தம்பி, தங்கையரே!**

நம் பரிசுத்ததந்தை 23-ம் அருளப்ப பாப்பரசர் சென்ற மாதம் 29-ந் திகதி உலகமுழுவதிலும் உள்ள விசுவாசிகளுக்கும், மேற்றிராணிமாருக்கும் ஒரு திருமுகம் எழுதியுள்ளார். அதிலே உலக சமாதானத்துக்காக மன்ருடும்படியும், விசேஷமாய் உலகசமாதானத்துக்காகச் செபமாலை சொல்லும்படியும் கேட்டிருக்கிருர். தேவதாயாரின் திருச்செபமாலை மாதமாகிய இம்மாதத்திலே நீங்களும் பாப்பரசருடைய கருத்துக்காக, உலக சமாதானத்துக்காகச் செபமாலை சொல்லிவாருங்கள். வீட்டிலேயானுலும், கோவிலிலேயானுலும், பாடசாலையிலேயானுலும் பக்தியுடன் செபமாலை சொல்லிவாருங்கள்.

அன்புள்ள அண்ணு

---

## மூன்று வேதசாட்சிகள்

முன்னொருகாலத்தில் ஸ்பெயின் தேசத்திலே வலென்சியா என்னும் நகரில் ஒரு சோனகப் பிரபுவிற்கு இரு புதல்வர்களும், இரு புதல்விகளும் இருந்தனர். அவர்கள் சிறுவர் சிறுமிகளாய் இருக்கும்போது அவர்களுடைய அன்னை இறந்ததால் அவர்களைத் தகப்பன் மிக அன்பாய் வளர்த்துவந்தான்.

இச் சோனகப் பிரபு கத்தோலிக்கரை நாய்கள்போற்பாவித்து, அவர்களை எங்கு கண்டாலும் கொலைசெய்யும்படி ஏவலாளர்களுடன் தன் இளைய மகனையும் அனுப்பினுன். அவர்கள் கத்தோலிக்கரைத் தேடிக் கொலை செய்யப்போகும் வழியிலே ஒரு காட்டினுள் ஓர் இனிய குரல் கேட்டது. உடனே இளைய மகன் அந்தக் குரல் கேட்ட இடத்தில் போய்ப் பார்த்தபோது வெள்ளை அங்கிஅணிந்த, ஆசீர்வாதப்பர் சபையைச்சேர்ந்த குருமார் இருந்தனர். உடனே அவன் ஏவலாளர்களிடம் சென்று, "நீங்கள் போய் நான் கத்தோலிக்கரைப்பற்றி அறியும் அலுவலில் ஈடுபட்டிருப்பதாகத் தந்தையிடம் தெரிவியுங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு, அந்தக் குருமாரிடம்சென்று அவர்களுடைய மடத்திலே தங்குவதற்கு இடம் கேட்டு அங்கு தங்கினுன். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாய் ஓடி, மாதங்கள் வருடங்களாயின. இந்த இளையமகனுர் அங்கே தன்னுடைய 'அமீத்' என்னும் பெயரை மாற்றிப் பேணுட் என்னும் பெயருடன் ஞானஸ்நானம் பெற்றுக் கடைசியாக ஒரு குருவானவராய்த் திகழ்ந்தார்.

பின்பு அவர் பெரிய குருவிடம் அனுமதிபெற்றுத் தன் சொந்த நகருக்குப் புறப்பட்டார். அங்கே தந்தை இறந்ததால் அவரிடமாக அவரது அண்ணன் ஆட்சிநடத்திவந்தான். இவன் தன் தம்பி மதம்மாறி இருப்பதைக் கண்டு பாம்புபோல் சீறினுன். பின்னர் தன் இரு சகோதரிகளையும் அழைத்து, "தம்பி மதம் மாறியிருக்கிருன்; ஆதலால், அவனுடைய மனதை மாற்றிவிடுங்கள்" என்று கூறினுன். அவர்கள் எவ்வளவுமுயன்றும் இயலாமல் போனதுமல்லாமல், அவருடைய போதனைகளைக் கேட்டு இரு சகோதரிகளும் சொரைடா, சயிடா என்னும் தங்கள் பெயர்களை மாற்றி மேரி, அருள் என்னும் பெயர்களைத் தரித்து, ஞானஸ்நானம் பெற்றனர். அண்ணனை மதமாற்றம் செய்ய முடியாததால் நாடுகடத்தும்படி மூத்த சகோதரனிடம் கூறிவிட்டு, அன்றிரவே அவ்விடத்தைவிட்டு மூவரும் நீங்கினுர்கள். தம்பியும், தங்கைமாரும் மதம் மாறி, இடம்மாறிவிட்டனர் என்பதை அறிந்த அண்ணன் அவர்களைத் தேடிச்சென்ருன்.

அவன் செல்லும் வழியிலே தன்னுடைய தம்பியார் தண்ணீர் எடுத்துக்கொண்டு செல்வதைக் கண்டு, அவரைக் கொல்ல மூன்று முறை ஈட்டியை நீட்டியும் அவரைமட்டும் கொன்றுவிடக் கூடாதென்று நினைத்து மூவரையும் அழைத்து வரும்படி சேவகர்களுக்குக் கட்டளையிட்டுவிட்டு, அரண்மனைக்குத் திரும்பினுன். சேவகர்களும் அவன் கட்டளைப்படியே மூவரையும் அழைத்துச் சென்ருர்கள்.

அரண்மனை சேர்ந்ததும் அண்ணன் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று, ஒரு கதிரைமீது அமர்ந்துகொண்டு இருசகோதரிகளையும் இரு பக்கங்களிலும் ஒவ்வொருவராக அமரச்செய்தான். பின்னர் அவர்கள் முன் தன் தம்பியாரைச் சுவரிற் சாத்தி ஆணியால் அறைந்து உயிரைப் போக்கினுன். இதைக் கண்ட இளையவளாகிய 'அருள்', "அண்ணு! அவரை இவ்வளவு சீக்கிரம் மோட்ச பேரின்ப பாக்கியத்தை அடையச் செய்ததற்காக எங்கள் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்; எங்கள் இருவரையும் எப்போது அனுப்புவாய்?" என்றுகேட்டாள். உடனே அவன் சேவகர்களை அழைத்து, "இவர்கள் இருவருடையவும் சிரங்களை வெட்டுங்கள்" என்று கட்டளையிடவே, அவர்கள் இருவரும் வாளுக்கு இரையானுர்கள். இவ்விதம் மூவரும் வேதசாட்சிகளாய்மரித்தார்கள்.

இப்போது இவர்களுடைய ஞாபகார்த்தத்தை ஆசீர்வாதப்பர் சபை வருடாவருடம்கொண்டாடுகின்றது.

எஸ். எமல்டா,
கார்மேல் பாடசாலை,
அம்பிற்றியா.

---

## பாத்திரம் அழுக்கானால்....

ஓர் ஊரிலே ஒருபோர்வீரன்வாழ்ந்திருந்தான். அவன் தன்சிறியகாலத்தில் பாவவழியிலே நடந்துவந்தான். ஆனுல், அவன் தினமும் தேவஅன்னையைக் குறித்துச் செபமாலையில் ஐந்து காரணிக்கங்களைச் சொல்லிவரத் தவறவில்லை. இப்படி வாழ்ந்துவரும்பொழுது ஒருநாள் அவன் நெடுந்தூரம் பயணஞ்செய்ய வேண்டியிருந்தது. பயணத்தூரம், களைப்பு, அலுப்பு என்பன அவனை வாட்டின. பாதித்தூரம் சென்றதும் ஓர் மரநிழலை அண்டி இளைப்பாறலானுன். பசி வயிற்றைப் பிடுங்கியது. ஒருவரும் இல்லாத தேசாந்திரம் அது. இன்னும் ஐந்து ஆறு மைல்தூரம் சென்ருல்தான் ஊர் மனைகள்தோன்றும். மேலும் நடக்க அவனுக்குச் சக்தியில்லை. மரநிழலிலேயே படுத்து உறங்கிவிட்டான். இரண்டுநாள் நித்திரை இல்லை. காட்டுப் பயணத்தை முடிக்க வேண்டியிருந்ததால் தொடர்பாக, இரவுபகலாக நடந்தான், எனவே, அவன் நித்திரை மயக்கத்தில் அப்படியே தனது கைத்தோல் பையைத் தலையணையாக வைத்துப் படுத்துச் சில நிமிடங்களில் தூங்கிவிட்டான். மீண்டும் விழித்த இரண்டுமணிக்குப் பின்னுல் பசி எடுத்தது. தாகமும்கூட. உடனே எங்காவது நீர்கண்டுபிடிக்க முயன்ருன். அப்போது தேவதாயார் தோன்றி அவனுக்குப் போசனம் கொடுத்தார். ஆனுல், அவன் அதைச் சாப்பிடவில்லை. காரணம், பாத்திரம் அழுக்காய் இருந்ததே. "சாப்பிடு மகனே" என்று தேவதாயார் கூறியும் அவன் சாப்பிடவில்லை. இதைக் கண்ட தேவ அன்னை, "மகனே! உனது செபமாலையும் இப்படித்தான்; உன் ஆத்துமம் அழுக்காய்—பாவச்சேருய் இருக்கும்போது அதனுல் பயன் எதுவும் இல்லை" என்று கூறி மறைந்தாள். அன்றுமுதல் அவன் திருந்தி நல்லவனுய் நடந்தான்.

— எஸ். எம். ஜே.

---

## நன்றித் துதி

வவுனியாப் பகுதியிலுள்ள பெரிய கொமரசன்குளத்தில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் பரிசுத்த தேவதாயாரிடம் நாட்குறிப்பிட்டு ஓர்வேண்டுதல் செய்து, அதுநிறைவேறின் பத்திரிகையில் பிரசுரிப்பேன் என்று தீர்மானித்தேன். குறித்தநாளில் எனதுவேண்டுதல் நிறைவேறியது. நன்றியாக இதைப்பிரசுரிக்கிறேன்.

செ. செபமாலை
பெரிய கொமரசன்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பக்கம்

( 3-ம் பாகம் )

## தொழிற் பிரச்சினையும், அரசாங்கமும்

(முன்தொடர்ச்சி)

**2. தொழிலாளர்மீது அரசாங்கத்துக்கு இருக்கவேண்டிய சிரத்தை.**

தேசத்தின் பொதுநலத்தில் இருந்து தனிமனிதர் தங்கள் சௌகரியத்துக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதால், எல்லாரும், ஒருவரும் பாக்கியில்லாமல், அந்தப் பொது நலத்துக்கு உதவி செய்யவேண்டும். எனினும, எல்லாரும் ஒரேவிதமாக அல்லது ஒரேஅளவாக பொதுநலத்துக்கு உதவக் கூடுமென்று நினைக்கக்கூடாது. எவ்விதமான அரசாங்கம் இருந்தாலும், குடிகளின் நிலைமையில் ஏற்றத்தாழ்வும் வித்தியாசமும் இல்லாமல் போகாது. வித்தியாசமில்லாத ஒரு சனசமூகம் இருக்கமுடியாது. அது இருக்கக் கூடுமென்று நினைப்பது முதலாய் முடியாத காரியம்.

பொதுநன்மைக்காகத் தங்களை ஈடுபடுத்தி உழைக்கும் ஒருசிலர் ஒவ்வொரு இராச்சியத்திலும் இருப்பது அவசியம். இவர்கள் சட்டங்களை ஏற்படுத்திக் குடிகளைப் பரிபாலனம் செய்வோர். தங்கள் அதிகாரத்தாலும் ஆலோசனைகளாலும் சமாதான காலத்தில் தேசத்தை ஆளுவார்கள்; யுத்த காலத்தில் தேசத்தைப் பாதுகாப்பார்கள். இவர்கள் தான் நாட்டில் முதலிடம் வகிப்பவர்கள். இவர்களை மேலாகக்கருதி மதிப்பது தகுதியே. ஏனெனில், இவர்களின் உழைப்பினாலேயே குடிகளின் பொதுநலம் மேன்மையடைகிறது. ஒருவியாபாரி அல்லது தொழிலாளி இவர்களைப்போல் பொதுநன்மைக்கு அவ்வள்வு நேரடியாக உதவுவதில்லை. எனினும், அவர்களும் முக்கியமான ஒருவகையில் தேசநலனுக்கு உதவுகிறார்கள்.

மனிதர் தங்கள் மேம்பாட்டைக் கருதியே ஒன்றுகூடிச் சீவிக்கின்றனர். ஆகவே, சனசமூகம் கைக்கொள்ள வேண்டிய முக்கியமானகாரியம் ஒழுக்கமாகும். இதை நாம் பலதடவை அழுத்திக்கூறியுள்ளோம். சன்மார்க்க ஒழுக்கத்திற்கு உணவு முதலிய ஜீவாதாரப் பொருள்களும் அவசியம். எனவே, நல்ல ஏற்பாடுகளையுடைய அரசாங்கங்கள் எல்லாம் இவ்வித பொருள்கள் குடிகளுக்கு எளிதில் கிடைக்கும்படி ஒழுங்குகள் செய்து வரும்என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தொழிலாளிகளின் உழைப்பு இல்லாமல் இந்த ஜீவாதாரப் பொருள்கள் எங்கிருந்து கிடைக்கும்? தொழிலாளிகளே தங்கள் திறமையையும், சக்தியையும் கொண்டு பயிர்செய்தோ, கைத்தொழில் செய்தோ பொருளுற்பத்தி செய்கின்றனர். எனவே, தொழிலாளர்களால்தான் எந்த அரசாங்கமும் பொருளாதாரத்தில் முன்னுக்குவரக் கூடும். ஆகவே, தொழிலாளிகளின் நன்மையைக் கவனிப்பது தேசத்தைப் பரிபாலனம்பண்ணுகிறவர்களின் கடமையாகும். சமூகத்தின் நன்மைக்காக இவ்வளவு அதிகமாகப் பாடுபடும் அவர்கள் தங்கள் உழைப்பினால்வரும் ஊதியத்தில் பலனடையவேண்டியது நியாயமே. அவர்களுக்கு வசிக்க வீடும், உடுக்கஉடையும், உண்ண உணவும், சரீரசுகமும் கிடைக்குமானால் தங்கள் வாழ்க்கையின் கஷ்டதுன்பங்களை அதிகம் உணராமல் அவற்றை இலகுவில் சகிக்கக்கூடியதாக இருக்கும். ஆகையால், தொழில்புரிவோரின் சேமத்துக்கு என்னென்ன ஏற்றவையெனத் தெரிகிறதோ, அவை யாவும் அரசாங்கத்தால் பரிவுடன் கவனிக்கப்படல்வேணடும். இவ்விதம் தொழிலாளிகள்விஷயமாய்ச் சிரத்தையெடுத்துக்கொள்வதால் பிறருடைய நலனுக்குப் பங்கம் ஏற்படுமோ என்று அஞ்சவேண்டியதில்லை. அதற்கு மாறாக, அதனால் எல்லோருக்கும் அனுகூலமே உண்டாகும். ஏனெனில், ஒரு சமூகத்தின் சேமத்துக்கு ஆதாரமாக இருப்பவர்களைத் தரித்திர துன்பங்களிலிருந்து காப்பாற்றுவது அந்தச்சமூகத்துக்கு எப்போதும் நன்மை பயக்குமேயொழிய ஒருபோதும் தீமை பயக்காது.

# தொழிலாளரின் உரிமைச் சாசனம்

### 13-ம் சிங்கராய பாப்பரசரின் பொதுநிருபம்

**3, அரசாங்கத்தின் அதிகார எல்லை:**

தனிமனிதனின் சுதந்திரங்களையும், குடும்பத்தின் உரிமைகளையும் அரசாங்கம் அளித்துவிடக்கூடாதென்று நாம் முன் கூறினோம். பொதுநன்மைக்கும், பிறர் உரிமைகட்கும் விக்கினம் உண்டாகாத முறையில் தனிமனிதனும், குடும்பமும் எவ்வித தடையுமின்றிச் சுயாதீனமாய்ச் செயலாற்ற அரசாங்கம் விட்டுக்கொடுக்கவேண்டும். சமூகத்தையும் அதன் அங்கத்தினர் அனைவரையும் பாதுகாப்பது தேசாதிகாரிகளின் கடமையாகும். சமூகத்தைப் பராமரிப்பதே தேசாதிகாரியின் முக்கிய கடமை. அரசாங்கம் ஏற்பட்டிருப்பதின் நோக்கமும் இதுவே. சமூகத்தை மட்டுமல்ல, அதன் அங்கத்தினர் அனைவரையும் பாதுகாப்பதும் அரசாங்கத்தாரின் கடமையாகும். அதிகாரிகள் தங்கள் சொந்தச்சௌகரியங்களைத் தேடிக்கொள்ளாமல், தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட குடிகளின் நன்மையைக்கவனிக்கவேண்டுமென்பதே சுவிசேஷமும், தத்துவசாஸ்திரமும் படிப்பிக்கும் போதனையாகும். சகல அதிகாரமும் சருவேசுரனிடம் இருந்தே வருகிறது. அரசாளும் அதிகாரம் சகல அரசாட்சிகளுக்கும் மேலான ஒரு ஆதிபத்தியத்தில் பங்குபெறுதல் எனலாம். எனவே, சருவேசுரன் தமது அதிகாரத்தை உபயோகிப்பது போலவே, தேசாதிகாரியும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரத்தை உபயோகிக்கவேண்டும். அதாவது, இராச்சியகாரியங்களைப் பொதுவாக நிர்வகிப்பதோடு நின்றுவிடாமல், தந்தைக்குரிய கவனத்தோடு ஒவ்வொருவருடைய விபரங்களையும் அறிந்து கருமங்களை நடத்தவேண்டும்.

பொதுநலத்திற்கு, அல்லது குறிப்பிட்ட ஒரு வகுப்பினருக்குக் கெடுதி ஏற்படும்போதும், வேறுவழியில் தடுக்க முடியாத ஆபத்து அடுத்துவரும்போதும் அரசாங்கம் தலையிட்டு அவைகளை விலக்கவேண்டும். ஒரு நாட்டின் பொதுநலத்திற்கும், தனிமனிதனின் சேமத்திற்கும் பின்வரும் காரியங்கள் அவசியம். நாடெங்கும் சமாதானமும், நல்லொழுக்கமும் நிலவவேண்டும்; சுபாவப் பிரமாணங்களுக்கும், தேவகற்பனைகளுக்கும் அமைந்த முறையில் இல்வாழ்க்கை நடத்தப்படவேண்டும்; வேதக் கோட்பாடுகளை மதித்து அவற்றிற்கேற்ப ஒழுகவேண்டும்; பொது வாழ்க்கையிலும், தனிவாழ்க்கையிலும் குடிகளிடையே சன்மார்க்கம் உயர்நிலையடையவேண்டும்; நீதி பூசிதமாய் மதித்துப் பேணப்படவேண்டும்; பிறனுக்குத் தீமையிழைத்தவன் தண்டிக்கப்படாமல் போகக்கூடாது; நாட்டுமக்கள் எல்லோரும் வீரமும், [illegible] ளாகவளர்ந்து, அவசியமேற்படும்போது தங்கள் தேசத்தை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

குடிகளுக்கு வரக்கூடிய ஆபத்துக்களும், கேடுகளும் அனேகமுண்டு. தொழிலாளிகள் எல்லோரும் ஒன்றுகூடி வேலைநிறுத்தம்செய்தோ, வேறுவிதமாகவோ பொதுசன அமைதிக்குக் கேடுவருவிக்கக்கூடும்; தொழிலாளர் மத்தியில் சன்மார்க்க உணர்ச்சி குறைந்து, குடும்ப ஐக்கியம் பாதிக்கப்படக்கூடும்; வேதக்கடமைகளை அனுசரிக்கத் தொழிலாளருக்குப் போதிய நேரமும், வசதியும் இல்லாததால் அவர்கள் மத்தியில் வேதப்பற்றுதல் குறைந்து கொண்டு வரக்கூடும்; தொழிற்சாலைகளிலும், பொருள் உற்பத்தி நிலையங்களிலும் ஆணும் பெண்ணும் சேர்ந்து வேலை செய்வதால், அல்லது வேறு சந்தர்ப்பங்களை முன்னிட்டு நன்னடத்தைக்கு விக்கினம் உண்டாகக்கூடும்; முதலாளிகள் நியாயம் தவறிய முறையில் தொழிலாளிகளிடம் அதிக வேலை வாங்கக்கூடும், அல்லது மனிதர் என்ற கௌரவத்திற்குப் பங்கமேற்படும் முறையில் அவர்களை நடத்தக்கூடும்; கடைசியாக அளவுக்கு மிஞ்சிய வேலையால், அல்லது ஆண், பெண், சிறுவர் என்ற வித்தியாசமின்றித் தகாத வேலைகளில் அவர்களை அமர்த்துவதால் அவர்களின் சுகத்திற்குக் கேடு ஏற்படக்கூடும். இவ்வித சந்தர்ப்பங்களில் குறைகளை நிவிர்த்திக்கும் பொருட்டுச் சந்தேகமின்றி அரசாங்கத்தின் உதவியை நாடலாம். இவ்விஷயங்களில் அரசாங்கம் தலையிடலாம். என்றாலும், குறைகளை நிவிர்த்திக்குமளவில் மட்டும் தக்க நடபடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாமே யொழிய, அதற்கு மேலதிகமாக வேறொன்றிலும் அது தலையிடக் கூடாது.

(தொடரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2351**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம்
பலாலிறோட், 1-ம் ஒழுங்கை
நாகலிங்கம் செல்லத்துரை
— வழக்காளி

எதிராக
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
அம்பான்தொல்லை
சித்தன் சின்னத்தம்பி
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2351-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நான்கு துண்டுக் காணிகள் 1961-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை (16-11-61) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5,600/-. இன்னும் ரூபா 4,000/-த்திற்கு 24-7-58 தொடக்கம் 15-12-58 வரையும் 100-க்குப் 12% வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 161/- உம். இதில் ரூபா 2,000/- கொடுபட்டது.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி கொக்குவில் (நல்லூர்) கோயிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை "அம்பாதில்லையும், தம்பாசிட்டியும்" ப. நி. இ. 3, குளி 9½. கல் வீடும், பயிர்வகைகளும், கிணற்றில் தண்ணீர்ப்பங்கும். எல்லை: கிழக்கு—றோட்டு. வடக்கு — சதாசிவம்பெண ஆச்சிமுத்துவின் ஆதனம். மேற்கு—எதிரியின் ஆதனம். தெற்கு—கையொழுங்கை. இதடங்கலும்.

2. மேற்படி கொக்குவில் கிழக்கிறை "அம்பாதில்லையும், தம்பாசிட்டியும்" ப. நி. இ. 4. தென்மேற்கேயுள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்கும். எல்லை: கிழக்கு—றோட்டும், வாய்க்காலும். வடக்கு—செல்லப்பாமகள் கமலாட்சிக்கும், சகோதரனுக்குமுரிய ஆதனம். மேற்கு—அப்பாபிள்ளை இராசையாவிற்கு உரிய ஆதனம். தெற்கு—எதிரியின் ஆதனம். இதடங்கலும்.

3. மேற்படி கொக்குவில் கிழக்கிறை "அம்பாதில்லை அல்லது அம்பாதொல்லை" ப. நி. இ. 8 பயிர்வகைகளும், கிணற்றுப்பங்கும். எல்லை: கிழக்கு—[illegible]ந்தையா பெண் சோதிப்பிள்ளையின் ஆதனம். [illegible]யா கைம்பெண் சிவகாமிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு—தம்பாப்பிள்ளைபெண் கதிரிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு — சுப்பிரமணியர் பெண் அன்னம்மாவிற்கும், மறுபேருக்குமுரிய ஆதனமும், பின்னால் விபரிக்கப்படும் ஆதனமும்.

4. மேற்படி கொக்குவில் கிழக்கிறை "அம்பாதொல்லை" ப. நி. இ. ½. எல்லை: கிழக்கு—சுப்பிரமணியம் பெண் அன்னம்மாவின் ஆதனம். வடக்கு — மேலே சொல்லப்பட்ட ஆதனம். மேற்கு — தம்பாப்பிள்ளைபெண் கதிரிப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—ஒழுங்கை. இதடங்கலும். ஆனால், பிறருக்குரிய பாதைஉரித்து பிறநீங்கல்.

**செ. இரத்தினசபாபதி,**
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 5-10-61

## நேர்த்தியின் பூர்த்தி

திவ்வியநற்கருணையில் எழுந்தருளியிருக்கின்ற யேசுவின் திருஇருதயத்தின் கிருபையாலும், மரியாயின் மாசற்றஇருதயத்தின் அனுக்கிரகத்தாலும், அர்ச். அந்தோனியார், அர்ச். நீத்தம்மாளின் வேண்டுதலாலும் நான்கேட்ட மன்றாட்டு அனுகூலமானதினால் நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்ததற்காக மன்னிப்புக் கோருகிறேன்.

யேசுவின் மைந்தன்

* * *

## நன்றித்துதி

அர்ச். யூதாததேயுவே! நான் உம்மிடம் கேட்டுக்கொண்டபடி எனது மகன் சோதனையில் சித்தியடைந்தமைக்கு என் மனமார்ந்த நன்றித்துதியைப் பிரசித்தப்படுத்துவதோடு இன்னும் உமது உதவிகளைத் தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

உமது அடியாள்

## JAFFNA MUNICIPAL COUNCIL

**Supplementary Budget No. 2 of 1961.**

NOTICE is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 2 of the Jaffna Municipal Council for the year 1961 will be open for public inspection at the office of the Jaffna Municipal Council for seven days commencing from 16th October 1961.

**T. S. Durairajah,**
Mayor.
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna 5th October, 1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## குஷ்டரோகர் சேனையை மேற்றிராணியார் பராமரிக்கிறார்

ஐரிஷ்சாதியினரும், கிழக்கு நைஜீரியாவில் ஒகாஜா மேற்றிராசன அதிபருமான தோமஸ் மக்கேற்றிக் ஆண்டகை அவர்கள் தாம் ஆபிரிக்காவில் வசித்துவந்த முப்பது ஆண்டுகளில் இருபது ஆண்டுகளைத் தமது மேற்றிராசனத்திலுள்ள குஷ்டரோகிகளைப் பராமரிப்பதில் செலவிட்டிருக்கிறார். ஒகாஜாவின் சுவாத்தியம் திறமையானது அல்ல, பிரிட்டிஸ் அதிகாரிகள் அதை அழிந்த மாகாணம் என்று அழைப்பர்.

மரியாயின் வைத்திய மிஷனரிமாரும், இல்லறவைத்தியரும், சேவையாளரும் செய்யும் பணியுடன் 20,000 குஷ்டரோகிகளுக்கு உணவும், உறைவிடமும், மருந்தும் கொடுத்துவருகிறார். அவர் நடத்திவரும் வைத்திய சாலைகள், மருத்துவநிலையங்கள், விசேஷ கிராமங்கள் முதலியன குணப்படமுடியாதவருக்கு நம்பிக்கையூட்டியும், குணப்படுபவர்களுக்கு வாழ்வளித்தும் வருகின்றன. லிவர்ப்பூல் நகரத்தவரும், இல்லறச் சேவையாளருமான செல்வி லில்லியன் மேர்வி சிறுவர்களுக்குப் பாட்டும், நடனமும் பயிற்றிவருகிறாள். வாத்தியக் கோஷ்டியொன்றும் உண்டு. வேலைசெய்ய இயன்றவர்கள் கைத்தொழில் செய்ய வசதியும் உண்டு. இன்னும் 20 ஆண்டுகளுள் குஷ்டரோகத்தை முற்றாய் அழித்துவிடலாம் எனத் தோமஸ் ஆண்டகை கருதுகிறார்.

* * *

## சகோதரராய்வாழ அழைப்பு

அங்கோலாவில் லுவண்டா மேற்றிராணியாரான அல்வேஷ் தடின்கோ ஆண்டகை அண்மையில் விடுத்தநிருபத்தில் "கிறிஸ்தவ சகோதரத்துவத்தை அனுசரிக்கும்படி" அங்கோலாவில் உள்ள சகலசாதி மக்களையும் கேட்டிருக்கிறார். இதிலிருந்துதான் சமாதானமும், அதன் விளைவாக முன்னேற்றமும், சந்தோஷமும் ஏற்படும். நேர்மையான சமுதாய மாற்றம் ஏற்படாவிடில் நன்மையான எதுவும் நிலைகொள்ளாது.

பரஸ்பர நல்லெண்ண மனப்பான்மையை வளர்த்து அனைவரையும் ஒன்றுசேர்க்கும் வழிகளைத் தேடியும், சமுசயத்துக்கு இடங்கொடாமலும் முயற்சித்தால்தான் முன்னேற்றம் கைகூடும். நம்பிக்கை உதிப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். எமது சமூகத்தில் மாற்றவேண்டிய அம்சங்கள் இருப்பின் அவைகளைக் கிறிஸ்தவக்கொள்கையின் அடிப்படையிலேயே நோக்க வேண்டும்.

* * *

## கியூபாமுறைகளை வெறுக்கிறோம்

வெளிநாட்டு விவகாரக்கொள்கையைப்பற்றிப்பேசும்பொழுது, ஆர்ஜென்ரீனா ஓர் கத்தோலிக்கநாடு எனவும், அது சர்வாதிகாரக் கொள்கையையும், தனிமனிதருக்கு மதிப்புக்கொடாத கொள்கையையும், சடவாதக் கொள்கையையும் தூற்றிக் கழிக்கும்எனவும் ஜனாதிபதி புரொண்டிஷி கூறினார். கியூபாவின் கைத்தொழில் மந்திரி திரு. கேவாராஉடன் நடத்திய சம்பாஷணையில் எழக்கூடிய பிழையான கருத்துக்களைத் தெளிவுபடுத்தி நாட்டின் இலட்சியங்களை அழுத்திக்கூறும் நோக்கத்துடன் இப்பேச்சை நிகழ்த்தினார். ஆர்ஜென்ரீனா மக்கள் கியூபாமுறைகளை அட்டியின்றி வெறுக்கின்றனர் எனவும் கூறினார்.

## சோடுதேடவும், தெறித்த இல்வாழ்வைப் பொருத்தவும் உதவிபுரியும் குருவானவர்

மிலானில் "லா காசா" (இல்லம்) எனும் முகவரியில் வண. பவுலோ லுகேரி சுவாமியார் குடும்பச் சேவையொன்று நடத்துகிறார். சதி(அல்லது பதி) தேடித்தருவார்; விவாகத்திற்கு ஆயத்தபோதனை தருவார்; இல்வாழ்க்கைகுலையும் பருவத்திலிருந்தால் சீர்ப்படுத்துவார். கடந்த யுத்தத்தின்போது குடும்பங்கள் பலகுலைந்ததைக் கண்ட சுவாமியார் இச்சேவையை ஆரம்பித்தார்.

போர்க்கைதிகளுக்கும் குடிமக்களுக்குமிடையில் 1,72,000 கடிதங்கள் பரிமாறினதினால் பிரிந்தகுடும்பங்கள் பலஒன்றுபட்டன. இப்பரோபகார சேவையில் பலயூதர்களுக்கும் உதவிபுரிந்தபடியால் சுவாமியார் டச்சோ கைதிகள் முகாமில் அடைபட்டார். யுத்தம் முடிவடைந்ததும் தமது சேவையை மேலும் பெருக்கினார். வைத்தியர், உளஆராய்வாளர், சட்டநிபுணர், குருமார்களுடைய உதவியுடன் விவாகஆயத்த சேவையை லாகாசாவில் ஆரம்பித்தார். இல்வாழ்வில் எழும்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆலோசனைகூறும் நோக்கமாக 1947-ல் விசேஷசேவையொன்றை ஆரம்பித்து, விவாகஆயத்த ஆலோசனைச் சேவையையும் சேர்த்துக்கொண்டார். இறுதியில் சோடு தேடுகிறவர்களுக்கு உதவிபுரிவதற்குப் "பொன்மோதிரம்" அலுவலகமும் ஆரம்பமாயது.

விவாகச்சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பிரசுரபோதனையும், இல்லறத்தைக் கைக்கொள்ள விருப்பவர்களுக்கு, மானத, சரீரசுக, சட்டச்சிக்கல்கள் இடையூறாயிருப்பின் அவைகளை நீக்குவதுபற்றியும், விவாகமானவர்கள் ஒற்றுமையைப் பாதுகாக்க ஆலோசனை கூறுவதுபற்றியுமே லாகாசா அலுவலகம் உருவாகியதென வண. லுகேரி சுவாமிகள் கூறுகிறார்.

1947-ல் இருந்து 10,000 பேர் விவாகஆயத்த ஆலோசனை பெற்றிருக்கின்றனர்; 40,000 பேர் இல்வாழ்வின் சிக்கல்கள்பற்றி உதவிபெற்றதுடன், ஆயிரமாயிரங்குடும்பங்கள் ஒற்றுமையாய்வாழ உதவியடைந்திருக்கின்றனர். விவாகமானவர்கள் குடும்பசகிதமாய் ஓய்வெடுக்கக் கோடைகால ஓய்வகமொன்றும் நடத்தப்படுகிறது.

* * *

## விஞ்ஞான ஆராய்ச்சியின் பயன்

"நேர்மையான விஞ்ஞானஆராய்ச்சியாளர் கடவுளின் அளவற்ற மகத்துவத்தை ஒப்புக்கொண்டு கிறிஸ்தவதாழ்மையைக் கைக்கொள்வர்." சூரியன், காற்று, பூமியின் உஷ்ணம் ஆகியவைகளிலிருந்து பெறும் சக்தியை மனித உபயோகத்துக்குச் செலவழிப்பது எப்படிஎன ஆராய்ந்து கொண்டிருக்கும் சர்வதேச விஞ்ஞானிகளின் குழு ஒன்றிற்குப் பேட்டி அளித்தபோது அருளப்பு பாப்பரசர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். முன்கூறிய விஞ்ஞானக்குழு ஐ. நா. சபை ஆதரவில் றோமையில் மகாநாடு ஒன்று நடத்தியது.

விஞ்ஞானஆராய்ச்சி கலையினதும், தொழில்நுட்பத்தினதும் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு இருப்பது மாத்திரம் அன்று மனித ஒழுக்க, ஆத்மீக வாழ்வையும் சார்ந்தது; ஏனெனில், இவ்வாராய்ச்சிகள் எல்லாம் மனிதனின் சுபீட்ச வாழ்வை அமைக்கும் நோக்கம் கொண்டவை.

## மேற்றிராணியாருக்கு விதித்தஅபராதம் நீக்கப்பட்டது

வங். செவரின், யே. ச. ஆண்டகையவர்களுக்கு மானநஷ்டம் செய்ததாகக்கூறி விதித்திருந்த 33பவுண் அபராத தண்டனையைச் சாம்பல்பூர் (இந்தியா) கோடு நீக்கிவிட்டது.

மத்திய பிரதேச அரசாங்க ஆணைப்படி மிஷனரிச் சேவைகள்பற்றி ஆராய்ந்த குழுவினர் விடுத்த அறிக்கைக்கு ஆண்டகைஅவர்கள் இறுத்த பதிலில் இம்மானநஷ்டம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

* * *

## சமூக சீர்திருத்தம் அவசியம்

தென்அமெரிக்காவில் பொலிவியாவில் பொதுவுடைமையரின் ஆதிக்கத்தைத்தடுக்கச் சமூகசீர்திருத்தம் அவசியம்எனப் பாப்பரசரின் பிரதிநிதியாகச் சென்றிருந்த பொஷ்ரன் கருதினால் கஷின் ஆண்டகை கூறினார்.

சாத்வீக முறையில் தேசசட்டம் ஏற்படுத்தி இம்மாற்றத்தை உண்டாக்காவிடின் எமது பொதுச்சத்துராதியாகிய சர்வதேசப்பொதுவுடைமை அதை ஆக்கப்போகின்றது.

தாம் தரிசித்த நாட்டில் அதிக வறுமையையும், வேலைஇன்மையையும் தாம் கண்டதாகவும் கூறினார்.

* * *

## மாறுவேடத்தில் சென்றனர்

நூறுஆண்டுகளுக்குமுன் ஒல்லாந்திலே 5கன்னியாஸ்திரிமார் தங்கள் துறவற உடைகளைவிட்டு, பொதுமக்களைப்போல் உடை அணிந்துகொண்டு குதிரைக் கோச்சி ஒன்றில் இங்கிலாந்துக்குச் சென்று கன்னியாஸ்திரிமடம் ஒன்றை ஆரம்பித்தனர். இவர்கள் இரக்கமுள்ள மாதாவின் பிறசிநேகக் கன்னியர். இவர்கள் வடக்கு உவேல்சுக்குவந்து பன்ரசாப்பட்டணத்தில் குதிரைலாயம்ஒன்றைத் தமதுவசிப்பிடமாக்கிச் சேவையைத் தொடங்கினர்.

எளிமையில் ஆரம்பித்தாலும் சேவையார்வம் நிறைந்துபோய் இருந்ததால் சிலஆண்டுகளுக்குப்பின் கத்தோலிக்கர் அல்லாத 120மாணவரைக் கொண்ட பாடசாலையை நடத்தும்படி கேட்கப்பட்டார்கள். மொஸ்ரின் பிரபுவும், பாரியாரும் கொடுத்த உதவியைக் கொண்டு ஒருசிற்றாலயமும், மாணவர் விடுதியும், அனாதைகள் விடுதியும் அமைத்தனர். இன்று பிரித்தானியாவில் பல விடுதிகளும், பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகளும் நடத்திவருகின்றனர்.

* * *

## ஐந்துகாயவரம்பெற்ற கன்னியாஸ்திரி

"கலாபிரியாவின் புனிதகன்னியாஸ்திரி"என அறியப்படுபவரும், முசோலினியின் வீழ்ச்சியையும், இரண்டாவது உலகமகாயுத்தத்தில் இத்தாலியருடைய தோல்வியையும் முன்அறிவித்தவருமான சிஸ்ரார் ஏலேனா அயலோ றோமையில் தமது 66-வது வயதில் காலஞ்சென்றுவிட்டார். பாடுகளின் சிறுகன்னியாஸ்திரிமார்சபையை அடியிட்டவரான இவர் கடந்த 40ஆண்டுகளாக 5காயமுள்ளவராய் வெள்ளிக்கிழமைதோறும் இரத்தவியர்வை சிந்திவந்தார். இவர் பார்லி தண்ணீரையும், பழஇரசங்களையும் மாத்திரம் உண்டு வருவார்.

துறவறம்சேர்ந்து சொற்பகாலத்துக்குப்பின் 1922-ல் ஐந்துகாயவரம் பெற்றார். அண்மைக் காலங்களில் வெள்ளிக்கிழமைதோறும் அவவுடைய மடத்திற்குவரும் யாத்திரிகர்களை நிரைப்படுத்தப் பொலிஸ்மார் தேவையாய் இருந்தனர். வெள்ளிக்கிழமைதோறும் இக்கன்னியாஸ்திரி பரவசம் அடைவார் என்றும், தாம்படித்திராத கிரேக்க, எபிரேய, அரமைக்மொழிகளைப்பேசுவார்என்றும் அவ்வேளை அவவுடையகுரல் ஆண்குரல்போல் மாறும் எனவும் கூறப்படுகிறது. பெரியவெள்ளிக்கிழமையில் கடுமையான துன்பத்தை அனுபவித்தபின் பரவசநிலைமாறி உத்தானஞாயிறுவரை சுய அறிவு அற்ற நிலையிலிருப்பார். நெற்றியிலும் விலாவிலுமிருந்து பொசியும் இரத்தத்தைச் சோதித்தபொழுது அதுவும், அவவுடைய சரீரத்தில் உள்ள இரத்தமும், ஒரேஇனமாகக் காணப்பட்டது.

1941-ல் எட்விஸ் முசோலினிக்கு இத்தாலியயுத்தத்தில் தோல்விஏற்படும்எனவும், அவளுடைய சகோதரனை பெனிற்றோ முசோலினி படுகொலைக்கு உள்ளாவார் எனவும் இக் கன்னியாஸ்திரி கூறினார்என றோமைச் செய்தித்தாள்கள் கூறின.

* * *

## வேதபோதகக் குருக்களின் தொகை அதிகரிப்பு

சென்ற ஆண்டு உலகிலே வேதபோதகக் குருக்களின் தொகை ஏறக்குறைய 2,000 உயர்ந்துள்ளது என்று வத்திக்கான் வானொலி அறிவித்திருக்கிறது. இவர்களில் சலேசிய குருக்கள்: 514; யேசுசபைக் குருக்கள்: 394; வின்சென்ற்சபைக் குருக்கள்: 240; சாமிநாதர்சபைக் குருக்கள்: 220.

* * *

## திருவழிபாட்டு நிலையம்

பரிசுத்த ஆன்செலம் மடத்தின் ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகளின் மேற்பார்வையில், இத்திங்களில் றோமையில் திருவழிபாட்டு நிலையம் ஒன்று நிறுவப்படும். திருவழிபாட்டைப்பற்றி ஆராய்ச்சி செய்து, முடிவுகளைத் தங்களின் தனிப்பத்திரிகையில் வெளியிடுவது இதன் நோக்கம். கத்தோலிக்க மக்களுக்குத் திருவழிபாட்டு முறைகளைப்பற்றி உரைகள் நிகழ்த்தவும் திட்டமிடப்பட்டு வருகின்றது.

## தேவ அன்னை இரட்சணியத்தின் பாதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தியாய் நாள்தோறும் செபிக்க வேண்டிய ஓர்அழகிய செபம். பாவியின் தேற்றரவு; அந்தரித்தோருக்கு ஆறுதல்; மோட்சபாதையின் வழிகாட்டி. இத்தகைய செபமாலையை நாம் நாள்தோறும் பக்தியாய்ச் செபிப்போம். "எங்களுக்கு உம்மை மென்மேலும் தெரிவித்தருளும். உமது செல்வமகன் யேசுவைக் காட்டித் தாரும். மோட்சத்தின் இராக்கினியே எம்மைக் கைதூக்கியருளும்".என்று எம் நேசத்தாயை இரந்து மன்றாடுவோம். அப்பொழுது இரட்சணியம் எம்முடனே இருக்கும்.

ச. ஞேபோன்கலன்

## நன்றித் துதி

தவிர்க்கமுடியாத துன்பத்துள் தத்தளிக்கும்போது தேவதாயாரின் இரக்கத்தையும், அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்தையும், பரி. அல்போன்சா சகோதரி, பரி. 12-ம்பத்திநாதர் இவர்களின் ஒத்தாசையையும் இரந்து சரணடைந்ததால் வெகுவிரைவில் அத்துன்பம்நீங்கி ஆறுதலடைந்தேன். எனதுநன்றியை அவர்களுக்குக்காட்ட இதைப்பிரசுரித்து, அவர்களை மகிமைப்படுத்துகிறேன். —க. வ.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday October 14-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org